
விரைவில் வருகிறது!
உன்னதமான.....
கலைச் சித்திரம்.
வாஸவதத்தா
வசுந்தரா·ஜி.என்.பி·சரோஜா·ராஜகாந்தம்
மற்றும் பலர் நடிப்பது.
நரஸு ரிலீஸ்..
I.A.C


ஒவ்வொரு தடவையும் வெள்ளையாகிறது
— ஜாஸ்தி அழுக்குப் படிந்த இடங்கள் உள்பட
உங்கள் ஆடைகள் நீடித்திருக்கும் காலம் ஜாஸ்தி அழுக்குப் படியும் பாகங்களை சலவை செய்யும் முறையைப் பொறுத்திருக்கிறது! ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள் அணிவதில் சிரத்துடன் அதிகமாக உராயும் பாகங்கள்தான் என்பது ஞாபகமிருக்கட்டும்—அதனுலேயே, உங்கள் துணிகளை பிரிந்து சோப்பைத் தேய்த்து, தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைக்கும்பொழுது இந்த பாகங்கள் முதலில் கெட்டுப்போகின்றன.
உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படிச் சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனுலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.
ஸன்லைட்டின் ஏராளமான சுலபமாக இயங்கிற நுரையை நனைந்த துணியிடையே நன்றாய் புகுத்திக் காக்கினும், அது ஒவ்வொரு தடவையும் வெண்மையாக்குகிறது—அதோடு சேதமின்றி சுத்தமாகச் சலவை செய்கிறது. இச்சுத்தமான சோப், அடித்துத் துவைக்காமலே அழுக்கையகற்றுகிறது; துணிகளை இறகைப் போல் மிருதுவாகச் செய்கிறது; மேலும் உங்கள் கைகளை மென்மையாகவும் மழமழப்பாகவும் வைத்துக் கொள்கிறது.
இது ஸன்லைட் முறைப்படி சுத்தம் செய்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
L. 81-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


அருமையான பற்கள் !
உங்கள் பற்கள் எத்தனை நாட்கள் புன்னகையை அழகுபடுத்தும் ?
ஒருவர் உள்ளத்தைக் கவர உங்கள் வசீகரப் புன்னகை மிகவும் எளிதானவழி என்பதை அறிவீர்களல்லவா. ஆகையால், உங்கள் பற்களை ஈறுவியாதிகள் பாழ்படுத்தாமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள். தினமும் தவறாமல் கவனிக்கும் எஸ். ஆர். டூத்பேஸ்ட்டினால் பற்களை சுத்தம் செய்தால் அவை உறுதியான ஈறுகளில் அழுக்கற்று வெண்மையுடன் விளங்குகின்றன.
பல் வைத்தியர்கள் ஈறுவியாதிகளுக்கு கைகண்ட மருந்தெனக் கருதும் சோடியம் ரிசினோலியேட் சேர்ந்தது.
S.R.
FOR TEETH AND GUMS
D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 36 | 1947 ஏப்ரல் 6 | வியஹு பங்குனி 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

நல்ல மனிதர்களையும் நல்ல காரியங்களையும் கண்டு நடுங்குவோரை, புனித தீர்த்தத்தைக் கண்டு பயந்தோடும் சைத்தான் என்று ஆங்கிலத்தில் வர்ணிப்பதுண்டு.

உலக மகா ஜனங்கள் போற்றும் உத்தமர்களைக் கண்டு ஓடும் பேர்வழிகள் இருக்கிறார்களா என்றால், இருக்கத்தான் செய்கிறார்கள்.

அமெரிக்கா முதல் பல வல்லரசுகளும் சிற்றரசுகளும் தங்கள் தங்கள் நாடுகளுக்கு விஜயம் செய்ய வேண்டுமென மகாத்மா காந்தியைப் பல ஆண்டுகளாக அழைத்த வண்ணமா யிருந்து வருகின்றன.



ஆனால், அவர் ஓர் அரை நிர்வாணப் பக்கிரி என்பதைத் தவிர, அவரிடம் வேறொரு பெருமையையும் காண முடியாத பிருகஸ்பதிகளும் உண்டு.

"மகாத்மா காந்தியை எதிர்த்தும் பாரேன், அவருடன் பேசவும் பேசேன்" என்று விரதம் பூண்டு, அந்த விரதத்தை வெற்றியுடன் நிறைவேற்றி, மேலே குறிப்பிட்ட ஆங்கிலப் பழமொழியின் உண்மையை நிரூபித்த ஒரு வைஸ்ராய் பிரபுவை அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அவ்வளவு தூரம் போவானேன்?

மகாத்மா காந்தி இங்கு வரக்கூடாது, யாருடனும் பேசக்கூடாது என்று தாக்கீது பிறப்பிக்கும் பிரமுகர்கள் இந்தியாவிலுந்தான் இருந்து வருகிறார்களே!

ஆனால், அத்தகையோருடைய அபிப்பிராயத்தை யெல்லாம் கேளாமல், புது வைஸ்ராய் லார்டு மவுண்ட் பாட்டன் இந்தியாவுக்கு வந்ததும் வராததுமாக மகாத்மா காந்தியைக் கண்டு பேசவேண்டுமென்ற ஆர்வம் கொண்டு அவருக்கு அவசர அழைப்பு அனுப்பி, அவரைத் தருவித்து அம் மகானுடன் மணிக்கணக்கில் அளவளாவிப் பேசி வருகிறார்.

உலகம் போற்றும் உத்தமருக்கு மரியாதை காட்டித் தமது உயர்ந்த குணத்தை வெளிப்படுத்தியுள்ள வைஸ்ராய் லார்டு மவுண்ட் பாட்டன்தான் வெற்றிப் பதக்கங்களுடன் நமது அட்டைப் படத்தின் மேல் வட்டத்தில் காட்சி யளிக்கிறார்.

கீழே பண்டித ஜவாஹர்லால் நேரு, லேடி மவுண்ட் பாட்டனுடன் கை குலுக்குகிறார். பக்கத்தில் நிற்பவர் இந்தியாவின் பிரதம தளபதி பீல்டு மார்ஷல் சர் ஆக்கின்லெக்.

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 36

என்ன சேதி?

வெற்றிச் சங்கு

ஏப்ரல் 6-ம் தேதியாகிய இன்றைய தினம் பாரத தேசம் அனைத்துக்கும் புனிதமான புண்ணிய தினமாகும்.

இருபத்தேழு வருஷங்களுக்கு முன்னால், 1919ஆம் எப்ரல் மாதம் 6-ம் தேதியன்றுதான் காந்தி மகான் முதல் முதலாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கினார். முதல் முதலாக இந்திய சுதந்திர இயக்கம் தேசியப் பொதுஜன இயக்கமாகப் பரிணமித்தது அன்றைய தினமேயாகும். அதிலிருந்து, ஒவ்வொரு வருஷமும் எப்ரல் மாதம் 6-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை ஏழு நாட்களை தேசிய வாரமாகக் கொண்டாடி வருகிறோம்.

ஆனால், இந்த வருஷம் மேற்படி தேசிய வாரத்தைக் கொண்டாடுவதற்கும் இத்தனை வருஷம் கொண்டாடியதற்கும் வித்தியாசம் இருக்கிறது. 27 வருஷங்களுக்கு முன்னால் காந்திஜி முழக்கிய மேற்படி சத்தியாக்கிரக யுத்த சங்கநாதத்துக்கு இன்று பலன் கிடைத்திருக்கிறது. இந்த வருஷம் நாம் மீண்டும் அந்த யுத்த சங்கநாதத்தை முழக்க வேண்டியதில்லை. வெற்றிச் சங்கத்தை 'பம்' 'பம்' என்று முழக்கலாம். 1948-ம் வருஷம் ஜூன் மாதத்திற்குள் வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டுப் போகப் போகிறார்கள் என்பது நிச்சயத்திலும் நிச்சயமாகிவிட்டது. எனவே, இந்த வருஷம் தேசிய வாரத்தைத் தமிழ் நாடெங்கும் தமிழ் மக்கள் வெகு விமரிசையாகவும் ஆனந்தமாகவும் கொண்டாடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பல் பிழைத்தது!

பழங்காலத்து மன்னர்களுடைய அரசாட்சியின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் நாள்தோறும் மாறு வேஷத்தில் நகர் சோதனை வருவார்கள் என்றும் ராஜ்யத்தில் நடக்கும் ஒரு அற்ப விஷயங்கூட ராஜாவுக்குத் தெரியாமல் போவதில்லை என்றும் சொல்வது வழக்கம். ஆனால் நம்முடைய இடைக்கால சர்க்காரின் அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிச் சொல்லுவதானால், என்ன சொல்ல முடியும்? பிரஜைகளின் சோற்றிலே உள்ள ஒரு சின்னஞ் சிறு கல்கூட அவர்களுடைய பார்வையிலிருந்து தப்பாது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரிசியிலே கல்லைக் கலக்கும் வித்தை வெகு காலமாக நம்முடைய நாட்டில் இருந்துதான் வருகிறது. ரேஷன் முறை அமுலுக்கு வந்த பிறகு, அது இன்னும் ரொம்ப அதிகமாகிவிட்டது. 10 அவுன்ஸ் அரிசி வாங்கினால் அதில் 2 அவுன்ஸ் கல்லும் 2 அவுன்ஸ் உமியும் இருப்பது வழக்கம். மாமியார்கள் நாட்டுப் பெண்களைப் பார்த்து, "என்ன அரிசியிலே கல்லைப் பொறுக்குகிறாயா? கல்லிலே அரிசியைப் பொறுக்குகிறாயா?" என்று கேலி செய்வது வழக்கம். ஆனால், இப்போது அது கேலியல்ல, உண்மையேயாகும். கல்லிலேதான் அரிசியைப் பொறுக்க வேண்டியதாக இருக்கிறது. இலையில் போட்ட உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஸ்ரீமான் கல் எங்கிருந்தோ திடீரென்று தோன்றிப் பல்லில் படாரென்று உடைந்து நம்முடைய நிலை கற்றச் செய்வார். சென்னை ஹோட்டல்களில் சாப்பிடுபவர்களுக்கு இது சர்வ சாதாரண அநுபவமாகும்.

இடைக்கால சர்க்காரின் உணவு மந்திரி ராஜன் பாபு இப்போது மேற்படி விபத்திலிருந்து நம்மைக் காப்பாற்ற முன் வந்திருக்கிறார்.

டாக்டர் ராஜன் பாபு சமீபத்தில் டில்லியில் ஒரு உணவுக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசும்போது, உணவுப் பொருள்

களில் கல்லையும் மண்ணையும் சேர்த்துக் கலப்படம் செய்வதை உடனடியாகத் தடுக்க வேண்டியது அவசியம் என்பதாக ரொம்பவும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

ராஜன் பாபு உணவு மந்திரியானதன் பிறகு தேசத்தின் உணவு நிலைமை சீரடைந்து வருவது தெரிந்த விஷயந்தான். அடுத்தபடியாக, உணவிலுள்ள கல்லையும் நீக்கி, தூய அரிசியாகவே நமக்குக் கிடைக்கும்படியாகவும் அவர் ஏற்பாடு செய்தால், இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் ஒவ்வொரு வேளையும் அவரை நினைத்துக் கொண்டே சாப்பிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆலயப்பிரவேச வெற்றி

“தேசத்துக்குச் சுயராஜ்யம் தான் முக்கியம். ஆலயப் பிரவேசம் விலயப் பிரவேசம் எல்லாம் என்னத்திற்கு? அதற்கெல்லாம் என்ன அவசரம்?” என்பதாகத் தமிழ்நாட்டிலே சிலர் சென்ற வருஷத்தில் சொல்லிக்கொண்டு வந்தார்கள். — அலையை நினைத்து உடலை இடிப்பதுபோல், ராஜாஜியின் மேல் ஏற்பட்ட கோபத்தினால் ஆலயப் பிரவேசத்தின் முக்கியத்தைக் கூட அவர்கள் மறந்து அந்த இயக்கத்தைத் தாக்கினார்கள். ஆனால் காந்தி மகாத்மா எவ்வளவோ தீர்க்க தரிசனத்துடன் ஒத்துழையாமை இயக்கத்தின் ஆரம்பத்திலேயே ஆலயப் பிரவேசத்தை ஒரு இன்றியமையாத நிர்மாண திட்டமாகச் செய்தார். சமீபத்தில் நவகாளி, பஞ்சாப் முதலிய இடங்களில் நடந்திருக்கும் பயங்கர சம்பவங்கள், ஆலயப்பிரவேசத்தின் அவசியத்தையும் மகாத்மாவின் தீர்க்க தரிசனப் பெருமையையும் குருடர்களும் அறியும்படியாக நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

சென்னையில் ராஜாஜி மந்திரி சபை இரண்டு வருஷம் நடந்தபோது பல காரியங்களில் இந்தியாவுக்கு வழிகாட்டியது போல் ஆலயப் பிரவேசத்திலும் முன்னால் நின்று வழிகாட்டியது. புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் பழனி ஆண்டவர் திருக் கோயிலும் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டன. சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் மகாத்மாவின் தமிழ்நாட்டு விஜயம ஆலயப்பிரவேசத்துக்குப் புத்துயிர் தந்தது.

பிரகாசம் மந்திரி சபை ஏற்பட்ட பிறகு, திருநெல்வேலி காங்கிரஸ் தொண்டர்கள் ஆலயப் பிரவேசத்துக்குத் துவஜாரோகணம் செய்தார்கள். திருச்செந்தூர், திருநெல்வேலி, சங்கரன் கோயில்களின் புகழ் பெற்ற ஆலயங்கள் திறக்கப்பட்டன. பிறகு தமிழ்நாட்டில் இன்னும் பல ஆலயங்களும் தாமே திறந்து கொண்டன.

இதைப் பற்றி நாம் சென்ற ஜனவரி மாதம் 19-ம் தேதி இதழில் “இனிமேல் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைச் சர்க்கார் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. சர்க்காருடைய அபிப்பிராயத்தைத்தான் ஜனங்கள் கேட்க வேண்டிய அவசியம் சேர்ந்திருக்கிறது. தமிழ் நாட்டுப் பொது மக்களின் அபிப்பிராயம் நன்றாக வெளியாகி விட்டபடியால், சென்னை சர்க்கார் உடனே தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களையும் ஹரிஜனங்களுக்குத் திறக்கும்படியாக உத்தரவு பிறப்பிப்பதே நியாயமும் முறைமையுமாகும்” என்பதாகக் குறிப்பிட்டிருந்தோம்.


அந்த நியாயமான முறைமையான காரியத்தைச் செய்யும் பாக்கியம் புதிய ஓமந்தூர் மந்திரி சபைக்குக் கிடைத்தது. வாழ்நாள் எல்லாம் ஹரிஜன விடுதலைக்காக அரும்பாடுபட்டு வந்திருக்கும் கனம் டாக்டர் ராஜன் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா ஆலயங்களையும் திறந்துவிடும் மசோதாவைச் சட்டசபையில் கொண்டு வந்து ஏப்ரல் 1ல நிறைவேற்றினார். அச்சமயம் டாக்டர் ராஜன் நிகழ்த்திய அற்புதமான பிரசங்கம் திருப்பித் திருப்பிப் படித்துப் பயன்பெறக் கூடியது. “என் முன்னோர்கள் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாக இந்த மசோதாவை நான் பிரேரேபிக்கிறேன்” என்று உருக்கத்துடன் உணர்ச்சி ததும்ப டாக்டர் ராஜன் கூறிய மொழிகள் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. உண்மையில் மேற்படி சட்டம் இந்தியா தேசத்தின் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தையே ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லுவது மிகையாகாது.

நமது தொடர் கதை

ஹிந்தி பாஷைக் கதாசிரியர்களில் ஒப்புயர்வற்ற ‘பிரேம்சந்த்’ அவர்களின் பெயர் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். முக்கியமாக ‘ஸேவாஸதன்’ என்னும் நவீனம தமிழ்நாட்டில் அவருடைய பெயரைப் பிரபலப்படுத்தியிருக்கிறது. சென்ற ‘கல்கி’ இதழில் குறிப்பிட்டிருந்த சரத்சந்திரரின் கதைக்குப் பதிலாக, பிரேம் சந்தரின் அமர இலக்கியமான ‘சந்திர ஹாரம்’ என்னும் தொடர் கதை இந்தக் கல்கி இதழில் ஆரம்பமாகிறது.

ஆந்திர கேசரியின் அபார வேலை!





''புது வைஸராய் லார்டு மவுண்ட் பாட்டன் சீக்கிரத்தில் எல்லா மாகாண கவர்னர்களையும் அழைத்து மகாநாடு கூட்டப் போகிறார்.'' —பத்திரிகைச் செய்தி.

வருஷப் பிறப்பு வெளியீடு!

கடகம்

தமிழ் நாடு டாக்கீஸ்



Producer: K. P. VARADACHARI.

விநியோகஸ்தர்கள்:

சென்னைக்கும் ஆந்திர தேசத்திற்கும்:

ஜயகுமார் பிலிம்ஸ்

213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு

மதராஸ்—1

செங்கற்பட்டு, வட - தென் ஆற்காடு ஜில்லாக்களுக்கு:

ஏ. கிருஷ்ணசாமி

வேலூர்

தஞ்சை, திருச்சி ஜில்லாக்களுக்கு:

கரூர் பிலிம்ஸ் சர்க்யூட்

கரூர்

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு:

ஜானகி பிக்சர்ஸ்

சிவகாசி

ஆசியா எழுகின்றது!

மத வெறி! மண் வெறி! பொன் வெறி!

இவைதான் மானிட வர்க்கத்தையே ஆட்டி வைக்கின்றன.

பாரில் நடக்கும் போர்களுக்கும் படுகொலைகளுக்கும் இவைதான் மூல காரணம்.

அத்தகைய வெறிகள் ஆட்கொண்டுள்ள அநாகரிக மயமான உலகில் நாகரிகம் என்பது என்னவெனில், அவைகளை அழகான போர்வைகளால், அதாவது அழகான வார்த்தைகளால் மறைப்பதுதான்.

மதச் சுதந்திரம், சாம்ராஜ்யச் சிறப்பு, வர்த்தக உரிமை என்ற அழகான வார்த்தைகளுக்குள்ளே மறைந்து கிடக்கும் வெறிகளால், உலகத்தில் இதுவரை ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களும் இன்னும் ஏற்பட்டு வரும் கஷ்ட நஷ்டங்களும் எண்ணில் அடங்கா.

சென்ற மகா யுத்தத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு வல்லரசும், உலகின் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படக் கூடாதென்பதற்காகத்தான் அதில் கலந்து கொள்ளுவதாகக் கூறியது.

மேற்படி உலக மகா யுத்தம் முடிந்து விட்டது. அந்த வல்லரசுகளும் வெற்றி பெற்று விட்டன. ஆனால், ஜனநாயகம் ரக்ஷிக்கப்பட்டதா வென்றால், அதைத்தான் காணோம்!

* * *

உலகின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரையில் அடிக்கடி வல்லரசு மகாநாடுகள் நடைபெறுகின்றன. எனினும், ஒரு மகாநாடாவது உருப்படுவதில்லை.

ஏன்?

உலகில் ஜனநாயக மணம் வீச வேண்டுமென்பதற்காகவா அம் மகாநாடுகள் நடைபெறுகின்றன? இல்லை, இல்லை.

நஷ்ட ஈடாக யார் யார் எந்தெந்தப் பிரதேசங்களை எடுத்துக் கொள்ளுவது? குறிப்பிட்ட தேசங்களில் யாருடைய துருப்புகளை வைத்துக் கொள்ளுவது? தோல்வியடைந்த நாடுகளை எத்தனை துண்டுகள் ஆக்குவது? எந்தத் துண்டம் யாருக்கு?

இவை போன்றப் பிரச்னைகளைத்தான் வல்லரசு மகாநாடுகள் விவாதிப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

உலகம் உய்ய வேண்டுமாயின், உலகில் அமைதி நிலவ வேண்டுமாயின், அத்தகைய அற்பப் பூசல்கள் ஒழிய வேண்டும். மிருக பலத்தால் பிற நாடுகளைச் சுரண்டும் புத்தி, வல்லரசுகளின் மனதிலிருந்து மறைய வேண்டும். விஞ்ஞானக் கலை மானிட வர்க்கத்தின் கொலைக் கருவியாக இருந்து வரும் அட்டூழியத்துக்கு இடம் கொடுக்கவே கூடாது. பல்வேறு நாடுகளுக்கும் பரஸ்பரம் உள்ள உறவு, பொருளாதாரச் சுரண்டலையும் இராணுவ உடன்படிக்கையையும் ஆதாரமாகக் கொண்டிருக்கக் கூடாது. மற்றும், ஒவ்வொரு வல்லரசும் தன் தன் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளும் சூழ்ச்சியையும் விட்டொழிக்க வேண்டும்.

வல்லரசுகள் அவ்வாறு தங்களுடைய விபரீதப் போக்கை முற்றிலும் மாற்றிக் கொண்டாலன்றி, எண்ணிக்கையற்ற மகாநாடுகளாலும் இரகசிய உடன்படிக்கைகளாலும் உலகத்தில் அமைதியை ஸ்தாபித்து விட முடியாது.

அதற்கு மாறாக, அவை வல்லரசுகளை மற்றொரு மகா யுத்தத்தில் கொண்டு போய்த்தான் சேர்க்கும்.

* * *

அத்தகைய வல்லரசுகளின் மகாநாட்டுக்கும், பாரதப் பிரசித்தி பெற்ற இந்திரப்ரஸ்தம் என்ற டில்லிமா நகரில் இப்போது நடைபெற்று வரும் அகில ஆசிய மகாநாட்டுக்கும் உள்ள வேற்றுமையை ஒரே ஒரு வாக்கியத்தில் கூறி விடலாம்.

வல்லரசுகள் மகாநாடு உலகத்தை அந்தகாரத்தில் ஆழ்த்துவது; அகில ஆசிய மகாநாடு உலகை உய்விக்கும் அருள் ஜோதியாக விளங்கப் போவது!

எனவே, அகில ஆசிய மகாநாடு உலகத்தின் முழு கவனத்தையும் ஈர்த்திருப்பதில் ஆச்சரியமில்லை.

சுமார் அரைக்கோடி சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள 30 தேசங்களிலிருந்து 150 கோடி ஜனங்களின் பிரதிநிதிகளாக 200 பேருக்கு மேல் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்களாம்.

அந்த நாடுகளில் சில இன்னும் கூட அடிமைத்தனத்திலிருந்து முற்றிலும் விடுதலை யடையவில்லை. சில விடுதலை பெற்று இப்போதுதான் சுதந்திர வாயிலை அடைந்திருக்கின்றன.

காலச் சுழலின் கோளாற்றால், ஆசிய நாடுகள் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்துக்கு உள்ளாக நேர்ந்தது. எனவே, சென்ற சில நூற்றாண்டுகளாக அவை ஒன்றுபட்டு நிற்க முடியவில்லை.

அன்னியரின் ஆதிக்கத்தால் ஆசியாவின் சிறந்த கலைகள் சீரழிந்தன: உயர்ந்த நாகரிகம் உருக்குலைந்தது; செல்வம் எல்லாம் சிதறி மறைந்தது.

ஒரே ஒரு விஷயத்திலிருந்து ஆசிய நாடுகளின் இன்றைய பரிதாப நிலைமையை உணர்ந்து கொள்ளலாம்.

பிரிட்டனிலும் நெதர்லண்ட்ஸிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை நூற்றுக்கு நூறு ஆகும். ஆனால், அவற்றின் ஆதிக்கத்திலுள்ள இந்தியாவிலும் இந்தோனேஷியாவிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்குப் பத்து பேர் கூட இல்லை.

இதுவரை நடந்துள்ள உலக மகாநாடுகளில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம்தான் இருந்து வந்திருக்கிறது.

எனவே, உலகச் சரித்திரத்தில் முதல் தடவையாக இப்போது ஆசிய மகாநாடு நடைபெறுவது, ஆசியாவிலிருந்து அன்னியர் ஆதிக்கம் தொலைந்துவிட்டதென்பதையும் ஆசிய மக்களுக்குச் சுதந்திர வாழ்வு ஆரம்பமாகிறதென்பதையுமே காட்டுகிறது.

*

பல மாதங்களல்ல, பல வருஷங்களும் அல்ல, சில நூற்றாண்டுகளாக ஆசிய நாடுகளின் செல்வத்தைச் சுரண்டியும் ஆசிய ஜனங்களின் உதிரத்தை உறிஞ்சியும் வந்துள்ள ஐரோப்பா சீது வந்தரம் தீர்க்கும் முறைகளை வகுப்பதற்காக அகில ஆசிய மகாநாடு நடைபெறவில்லை.

அத்தகைய அழிவு வேலைகள் ஐரோப்பிய நாடுகளின் வகுபோக உரிமையாக இருந்து வந்திருப்பதால், அந்தப் பாழும் உரிமையைப் புதைத்து விட்டு, ஆசியாவின் உத்தாரணத்துக்கும் உலகின் உத்தாரணத்துக்கும் உரிய ஆக்க வேலைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்பதே மேற்படி மகாநாட்டின் நோக்கமாகும்.

அம் மகாநாட்டில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன. அகில ஆசிய மகாநாட்டின் அடுத்த கூட்டம் 1919-ம் வருஷம் சீனாவில் நடைபெறவேண்டும் என்பதும் ஒரு தீர்மானமாகும்.

ஆசிய நாடுகளின் உத்தாரணத்திற்குரிய முக்கிய விஷயங்களை யொட்டிப் பிரதிநிதிகள் பரஸ்பரம் அபிப்பிராயங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எதிர்கால நடவடிக்கைகள் பற்றிப் பின்னர் ஆலோசிப்பதே பிரதிநிதிகளின் நோக்கமாகும்.

அதாவது, ஆசிய நாடுகள் விடுதலை பெறுவதற்குற்ற தேசிய இயக்கங்கள், நிறத் திமிரை ஒழிப்பதற்கான முறைகள், ஆசிய நாட்டு ஜனங்களுக்குள் பரஸ்பரம் குடியேறி ஸ்தாபிக்க வசதி, விவசாயப் புனருத்தாரணம், கைத்தொழில்கள் அபிவிருத்தி, தொழிலாளர் பிரச்னைகள், சமுதாயத் தொண்டு, கல்வி, சிற்பம், விஞ்ஞான ஆராய்ச்சி, இலக்கியம் முதலிய கலாசாரப் பிரச்னைகள் இவைகளை யொட்டிப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களும், ஆலோசனைகளும் அடங்கிய அறிக்கைகள் அங்கீகரிக்கப் பெற்றிருக்கின்றன.

இதிலிருந்து, ஆசியாவின் எதிர்கால க்ஷேமத்துக்கு மேற்படி மகாநாடு அஸ்திவாரமிட்டிருக்கிறதென்பது நிச்சயமாகிறது.

* * *

உலக நாடுகளின் நன்மதிப்பைப் பெற்றுள்ள பண்டித ஜவாஹர்லால் நேரு, மகாநாட்டின் ஆரம்பத்தில் செய்துள்ள ரசங்கத்தின் எதிரொலி சகல தேசங்களிலும் வியாபித்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஏகாதிபத்தியம் துருப் பிடித்து உதிர்ந்து விட்டதால், ஆசிய நாடுகள் சிறைப்பட்டிருந்த சுவர்களும் இடிந்து நொறுங்கி விட்டன. ஆசியாவில் ஐரோப்பா ஆதிக்கம் செலுத்திய அலங்கோலம் இனிப் பழங் கதையாகிவிடவேண்டும். உலகத்தில் அமைதியை யேற்பாடாகப்பதில் ஆசியா முக்கியப் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறெல்லாம் முழக்கம் செய்துள்ள மாபெருந் தலைவர், "நாங்கள்

ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தை ஆதரிக்கிறோம்'' என்று கூறியிருப்பதிலிருந்து. ஐரோப்பாவும் ஆசியாவும் பிரிந்து நிற்க வேண்டுமென்பது மேற்படி மகாநாட்டின் நோக்கம் அல்லவென்பதும் வியக்தமாகின்றது.

எனவே, உலக அமைதியிலும் க்ஷேமத்திலும் உண்மையான நாட்டங் கொண்ட எந்த தேசமும் அகில ஆசிய மகாநாட்டைக் கண்டு அதிர்ச்சியடைய வேண்டிய அவசியமில்லை.

நிறத் திமிரையும், சிறுபான்மையோர் அடங்கிய சாம்ராஜ்ய ஆதிக்கத்தையும் நிர்வாக 'நீதி'யின் சிகரமாகக் கொண்ட தென் ஆப்பிரிகா போன்ற நாடுகள் மாத்திரம் மேற்படி மகாநாட்டைக் கண்டு ஆத்திரமடையத்தான் செய்யும். எதேச்சாதிகார வெறி தலைக்கேறியுள்ள அந்த நாடுகள், உலகில் சமதர்மத்தையும் சகோதர பாவத்தையும் நிலைநிறுத்த விரும்பும் அகில ஆசிய மகாநாட்டை வரவேற்குமென நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

* * *

உலக மதங்களுக்கும் நாகரிகங்களுக்கும் கலாசாரங்களுக்கும் தாயகமாகத் திகழ்ந்த ஆசியா, சென்ற முந்நூறு வருஷ காலத்துக்கு மேலாக ஐரோப்பாவின் ஆதிக்கத்தால் கட்டுண்டு கிடந்தது. ஆனால், இப்போது அக்கட்டுகளெல்லாம் அறுபட்டு, மீண்டும் ஆசியா நவசக்தி பெற்று எழுந்திருக்கிறதென்பதை, மகாத்மா காந்தி, பண்டித ஜவாஹர்லால் நேரு, கவியரசி ஸரோஜினி தேவி, இந்தோனேஷியக் குடியரசின் பிரதம மந்திரி டாக்டர் ஷரீர் முதலிய தலைவர்கள் மகாநாட்டில் நிகழ்த்திய அரும்பெரும் பிரசங்கங்கள் அகில உலகத்துக்கும் அறிவித்திருக்கின்றன.

சுதந்திரமின்றித் தவிக்கும் பல நாடுகளிலும் மகா யுத்தப் பிரளயத்துக்குப் பின் ஒரு மகத்தான எழுச்சி ஏற்படுவது இயற்கை.

முதலாவது மகா யுத்தத்துக்குப் பின் துருக்கி, ருஷிய சாம்ராஜ்யங்கள் சிதறுண்டு போயின. அதன் பயனாக அரபு நாடுகளுக்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் ஓரளவு விடுதலை கிடைத்தது.

அதுபோலவே இரண்டாவது மகா யுத்தப் பிரளயம் முடிந்ததன் பலனாக ஆசிய நாடுகளிலும் மகத்தான எழுச்சி ஏற்பட்டு, இப்போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யமும், அமெரிக்க ஆதிக்கமும் மறையத் தொடங்கியிருக்கின்றன.

* * *

மிருக பலத்தையும் மண் வெறியையும் அஸ்திவாரமாகக் கொண்ட அந்த சாம்ராஜ்யங்களின் நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடிந்திருப்பதால், இப்போது உலகத்துக்கே வழிகாட்ட வேண்டிய மகத்தான பொறுப்பு ஆசியாவைச் சார்ந்திருக்கிறது.

உலக அமைதியை நிலைநிறுத்தி உலக நாடுகளை உய்விக்கும் சக்தியும் செல்வாக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்தும் கூட, அவை சுயநலம் காரணமாக அந்த அரிய சந்தர்ப்பத்தை இழந்ததுடன், உலகத்தையும் போர்ப் படுகுழியில் கொண்டு போய்த் தள்ளி விட்டன.

எனவே, ஆசிய நாடுகள் பூரண விடுதலை பெற்றுத் தங்களுடைய நிலைமையைச் சீர்திருத்திக் கொண்டதும், ஐரோப்பாவையும் அநாகரிக வாழ்க்கையிலிருந்து உத்தாரணம் செய்ய முற்படும்.

ஏனெனில், ஆசியாவின் வழி அன்பு வழியாகும். அன்பு, சகிப்புத் தன்மை, ஜீவகாருண்யம் முதலிய தெய்வீக குணங்களை வற்புறுத்திய உலக மதப் பெரியார்கள் அவதரித்ததும் ஆசியாவில்தான்.

அன்பும் அஹிம்சையுமே உருவான மகாத்மா காந்தி, 'ஐக்கிய உலகில் வாழவே நான் விரும்புகிறேன்' என்று அம் மகாநாட்டில் கூறியுள்ள உணர்ச்சி மிக்க வார்த்தைகள், பகைமையிலும் துவேஷத்திலும் இரண்டுபட்டுக் கிடக்கும் உலக நாடுகளின் செவிகளில் விழுமென நம்புகிறோம்.

எது எப்படியாயினும், இதுவரையில் தனித் தனியாகச் சிதறிக் கிடந்த ஆசிய நாடுகள் இப்போது ஒன்றுசேர்ந்திருப்பது முதல் வெற்றியாகும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற மகாத்மா காந்தி, டச்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற டாக்டர் ஷரீர், பாஸிஸத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற லார்டு மவுண்ட் பாட்டன் முதலிய வெற்றி வீரர்களின் ஆசி அம் மகாநாட்டுக்குக் கிடைத்திருப்பதால், அதன் இறுதி வெற்றியிலும் யாருக்கும் சந்தேகமிருக்க இடமில்லை.

புதிய அத்தியாயம்

சென்னை மாகாணத்தின் அரசியல் சரித்திரத்தில் ஒரு அத்தியாயம் முடிவடைந்து இன்னொரு புது அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது.

முடிவடைந்த அத்தியாயம் மிகக் கேவலமான அத்தியாயம். சோகமும் வேதனையும் பழியும் சதியும் அவமானமும் துரோகமும் நிறைந்த அத்தியாயம்.

அந்த அத்தியாயம் முடிவடைந்தது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய காரியம் என்பதில் சந்தேகமே யில்லை.

கொஞ்ச நஞ்சம் சந்தேகம் யாருக்காவது இருந்திருந்தாலும், மாஜி பிரதம மந்திரி பிரகாசம் அவர்களின் இரண்டு நாள் ஒப்பாரியைக் கேட்ட பிறகு தீர்ந்து போயிருக்க வேண்டும்.

மகத்தான புனிதம் வாய்ந்த ஸ்தாபனம் என்று பொது மக்கள் போற்றும் காங்கிரஸ் கட்சிக்குள்ளே நடந்த பதவி வேட்டைச் சூழ்ச்சிகளையும் பித்தலாட்டங்களையும் துரோகங்களையும் பற்றிக் காங்கிரஸின் ஜன்ம விரோதிகள் கூட ஸ்ரீ பிரகாசத்தைக் காட்டிலும் அப்பட்டமாகப் பேசி அலங்கோலப் படுத்தி யிருக்க முடியாது.

1942-ஆகஸ்டில் தேச விடுதலைக்காகச் சிறை சென்ற தியாகிகள், சிறைக்குள்ளிருந்தே அடுத்து வரும் தேர்தலில் மந்திரி பதவிகளைக் கைப்பற்றுவது பற்றிச் சதியாலோசனை தொடங்கியதில் ஸ்ரீ பிரகாசம் ஆரம்பித்தார். அப்படிச் சதியாலோசனை செய்தவர்களில் தாமும் ஒருவர் என்றும் ஒத்துக் கொண்டார். சிறைக்குள்ளே தமக்கு வாக்குக் கொடுத்தபடி மற்றவர்கள் நடந்து கொள்ளவில்லை யென்று புகார் செய்தார். அதாவது ஸ்ரீ பிரகாசத்தைக் கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் செய்வதாக மற்றச் சதிகாரர்கள் வாக்களித்திருந்தார்களாம்! அந்தப்படி செய்யாமல் கட்சித் தலைவர் பதவிக்கு இன்னொருவரைப் போட்டிக்கு நிறுத்தினார்களாம்!

தாம் பிரதமரான பிறகு ஒரு கோஷ்டித் தலைவர் கொடுத்த பெயர்களில் ஒரே ஒருவரை விட்டுவிட்டு மற்றவர்களை யெல்லாம் எடுத்துக் கொண்டாராம். "அந்த ஒருவரை எடுத்துக் கொள்ளாததினால் இப்படி என் மந்திரி சபையையே கவிழ்த்து விட்டார்களே? இந்த அநியாயம் அடுக்குமா?" என்று பிரகாசம்காரு புலம்பினார்.

இப்படியே தமது சகாக்கள் அனைவரையும் "பதவிக்காகச் சூழ்ச்சி செய்தார்கள்; என்னைக் காலை வாரி விட்டு விட்டார்கள்!" என்று செவிடுறும் ஓலமிட்டார். ஆனால், அவ்வளவு பேரிலும் சடுநாயகமான பதவி வேட்டைக்காரர் தாம் என்பது அவருடைய வாக்குமூலத்திலிருந்தே ஸ்பஷ்டமாக வெளியாவதை அவர் உணரவில்லை.

* * *

ஸ்ரீ பிரகாசம்காரு காங்கிரஸ் மேலோரைக் குறை கூறுவதுதான் எல்லாவற்றிலும் அதிசயமான விஷயம்.

சென்ற ஏப்ரல் மாதத்தில் சென்னைக் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களின் கட்சிக் கூட்டம் கூடும் தறுவாயில் காங்கிரஸ் மேலோரும் காந்தி மகாத்மாவும் ஒரு யோசனை சொன்னார்கள்.

அந்த ஒப்பற்ற உத்தமத் தலைவர்களின் யோசனையைப் புறக்கணிப்பதற்கு அச்சமயம் ஸ்ரீ பிரகாசம்காரு "ஜனநாயக உரிமை"யைக் காரணம் காட்டினார்.

"எங்களுக்குச் சுய நிர்ணய உரிமை யில்லையா? மாகாண சுதந்திரம் இல்லையா? எங்கள் தலைவரை நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்! நீங்கள் யார் யோசனை சொல்ல?" என்று கேட்டார்.

"ரொம்ப சரி!" என்றார்கள் காங்கிரஸ் மேலோர். "நாங்கள் சொன்னபடியே கேட்டுத்தான் ஆகவேண்டும் என்று உங்களை வற்புறுத்தவில்லை. ஏதோ நாங்கள் சொல்வதைச் சொன்னோம்; அப்புறம் உங்கள் இஷ்டம்!" என்றார்கள்.

தங்கள் யோசனையை மீறிப் பிரதம மந்திரி ஆனதற்காக ஸ்ரீ பிரகாசத்தைச் சாதிப்பிரஷ்டம் செய்திருந்தார்களா? எந்த விதத்திலாவது ஒதுக்கி வைத்திருந்தார்களா? கிடையவே கிடையாது! மாகாண காங்கிரஸ் மந்திரிகள் பொதுவான ஆலோசனைக்குக் கூடிய கூட்டங்களுக்கெல்லாம் சென்னை மந்திரிகளும் அழைக்கத்தான் பட்டார்கள். அவர்கள் அப்படி அழைக்கப் பட்டதும் மற்ற மாகாண மந்திரிமார்களுக்

குச் சமமாக நடத்தப்பட்டதும் வினிமாத் திரையில் வந்த செய்தி நிகழ்ச்சிகளிலே கூடப் பல தடவையும் காட்டப்பட்டன.

அப்படி யிருக்கும்போது காங்கிரஸ் மேலோர் மீது ஸ்ரீ பிரகாசம்காரு குறை சொல்லக் காரணம் என்ன?

அப்போது அவரைப் பதவியில் இருத்திய ஜனநாயக உரிமைதான் இப்போது அவரைப் பதவியிலிருந்து விழ்த்தியது. அச்சமயம் 82 வோட்டுக்களினால் அவர் பிரதமர் ஆனார். இப்போது 116 வோட்டுக்களினால் நீக்கப்பட்டார்.

இந்தக் கர்ம பலனுக்குக் காங்கிரஸ் மேலோர் என்ன செய்வார்கள்?

காங்கிரஸ் மேலோர் சென்னை மாகாண எம். எல். ஏ.க்களைக் கட்டாயப்படுத்தித் தம்மையே பிரதம மந்திரி பதவியில் கட்டாயமாய் வைத்திருக்க வேண்டும் என்பது ஸ்ரீ பிரகாசத்தின் இப்போதையக் கோரிக்கை என்று தெரிகிறது! எப்படி இருக்கிறது கதை!

"ராஜாஜியைத் தலைவராய் எடுங்கள்" என்று காங்கிரஸ் மேலோர் சொன்னால், அது பெருங் குற்றம்! ஜனநாயகத்துக்கும் மாகாண சுதந்திரத்துக்கும் விரோதம்!!

ஆனால் ஸ்ரீ பிரகாசம்காருவைப் பதவியில் வைப்பதற்காக மட்டும் மற்றச் சட்ட சபை அங்கத்தினரைக் கட்டாயப்படுத்த வேண்டும்! அப்படிக் கட்டாயப்படுத்தாதது பெரிய பிசகு! பிரம்மாண்ட துரோகம்!

எப்படி யிருக்கிறது நியாயம்!

இந்த அழகான நியாயம்—தலைகீழான நியாயம், — ஸ்ரீ பிரகாசத்துக்கு உசிதமாகப் படலாம். மற்றவர்களுக்கோ, அந்த நியாயம் பதவி மோகத்தினால் ஏற்பட்ட மதிமயக்க மாகவே அது தோன்றும்.

ஏன்? அந்த மதிமயக்கத்தினால் ஸ்ரீ பிரகாசம் ஆச்சாரிய கிருபளானியைக் கூடக் குறை சொல்கிறார். பாவம்! ஸ்ரீ கிருபளானி எப்படியோ ஸ்ரீ பிரகாசத்திடம் அபார அபிமானம் கொண்டு அவரையே பிரதமராக வைப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார். இந்த முயற்சியைச் சமரச முயற்சி என்று சொன்னார். மார்ச்சு 8உ நடந்திருக்க வேண்டிய காரியத்தை மார்ச்சு 22உ வரையில் ஒத்திப் போட்டார். இதெல்லாம் ஸ்ரீ பிரகாசம் காருவுக்கு எவ்வளவோ உதவியாகத்தான் இருந்தது. முதலில் அவருக்கு எதிராகக் கையெழுத்துப் போட்ட 134 பேரில் 18 பேரைத் தமக்குச் சாதகமாக அவர் திருப்ப முடிந்தது!

இப்படி யெல்லாமிருந்தும் கூட ஆசாரிய கிருபளானியை அவர் குறை சொல்கிறார்! அவருக்குச் "சட்ட ஞானம் இல்லை!" என்கிறார். மற்றச் சட்டசபை அங்கத்தினரை யெல்லாம் ஆசாரிய கிருபளானி பிரம்பினால் அடித்து ஸ்ரீ பிரகாசத்தை ஒப்புக்கொள்ளச் செய்திருக்க வேண்டும் போலும்! அப்படி ஏன் செய்யவில்லை யென்பது ஸ்ரீ பிரகாசத்தின் புகார்!

ஆச்சாரிய கிருபளானி அவர்களுக்கு நன்றாக வேண்டும்! இதுவும் வேண்டும், இன்னமும்கூட வேண்டும்!

* * *

ஜனநாயக உரிமை, காங்கிரஸ் மேலோரின் குற்றம், கிருபளானியின் சட்ட ஞானமின்மை,—இவை யெல்லாம் போகட்டும்.

ஸ்ரீ பிரகாசம் காருவின் ஆட்சி முடிந்ததற்காக இம் மாகாணத்தார் எந்த விதத்திலாவது துக்கப்பட வேண்டுமா என்றால், லவலேசமும் அதற்குக் காரணம் இல்லை! சந்தோஷப்படத்தான் எல்லாவிதக் காரணங்களும் இருக்கின்றன.

ஊழலில் வேர் விட்டுக் கொண்டு பிறந்த ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபை, ஊழலில் வளர்ந்து, ஊழலை வளர்த்து, ஊழலில் முழுகிப் போயிருந்தது.

"உணவுக் கமிட்டி அங்கத்தினர் முதல் மாகாண மந்திரிகள் வரையில் லஞ்சம் வாங்குகிற அரசாங்கமா சென்னைக்கு லபிக்க வேண்டும்?" என்று ஜனங்கள் எங்கெங்கும் பிரலாபித்தார்கள். அதைச் சட்ட சபையில் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பகிரங்கமாகச் சொல்லி ஏசினார்கள்.

ஊழல்களில் எல்லாம் பெரிய ஊழல், காந்தி மகாத்மாவின் பெயராலும் அவருடைய நிர்மாண திட்டத்தின் பெயராலும் நடைபெற்ற ஊழல்தான்!

காகிதத்தில் தயாரான கதர்த் திட்டங்களையும் கிராம நிர்மாண திட்டங்களையும் பார்த்துப் பிரமித்த வர்தா ஆசிரமக் குழுவினர், ஸ்ரீ குமரப்பா முதலியவர்கள், "ஐயோ! பிரகாசம் ஆட்சிக்கு ஆபத்தா?" என்று வருந்தினார்கள்.

ஆனால் உண்மையில் கதருக்கும் நிர்மாணத் தொண்டுக்கும் பிரகாசம்காருவின் திட்டங்களினால் பெரிய கேடுதான் விளைவிக்கப்பட்டு வந்தது. அது எப்படி என்று சுருக்கமாகச் சொல்கிறோம்:—

பிரகாசம் சர்க்காரின் கதர்த் திட்டம் காகிதத்தில் தயார் ஆன பிறகு. அதற்காக இது

வரையில் அதாவது சுமார் 8 மாதத்தில் 60 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறதாம்!

ஆனால் அத் திட்டம் காரணமாக இன்னும் ஒரு கஜம் துணிகூட உற்பத்தியாகவில்லை!

அவ்வளவும் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட பிர்க்கா உத்தியோகஸ்தர்களின் சம்பளம், படிச் செலவு, பிரயாணச் செலவு இவற்றிலேயே தொலைந்து போயிருக்கிறது.

இப்படிப்பட்ட ஊழல்கள் நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டு வந்தன! இதற்கெல்லாம் காரணமான பிரகாசம் சர்க்கார் விழுந்ததற்காக யார் வருத்தப்பட முடியும்? யாராவது வருத்தப்பட்டால், காரணம் சுயநலம் என்றோ அல்லது வருத்தப் படுவது அவர்களுடைய தலையில் எழுத்து என்றோதான் முடிவு கட்ட வேண்டும்.

* * *

சென்று போன பழைய அத்தியாயத்தை இத்துடன் விட்டு விட்டு, ஆரம்பமாகியிருக்கும் புது அத்தியாயத்தைக் கொஞ்சம் கவனிக்கலாம். புதிய மந்திரி சபை எப்படிப்பட்டது என்று பார்க்கலாம்.

புதிய பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் செட்டியார் சட்டம் படித்துப் பட்டம் பெற்றவர் அல்ல; பிரமாத வாக்கு வன்மை படைத்தவர் அல்ல; அரசியல் சூழ்ச்சிகளில் கைதேர்ந்த நிபுணரும் அல்ல.

ஆனால் மேலே கூறிய யோக்கியதைகள் பிரதம மந்திரியாவதற்கு அவசியமானவை என்று நாம் கருதவில்லை.

ஸ்ரீ செட்டியார் ஒழுக்கத்தில் சிறந்தவர்; நிர்வாகத் திறமை படைத்தவர்; மனிதர்களுடன் கலந்து பழகிப் பேசி விவாதித்துக் காரியம் சாதிக்கக் கூடியவர்.

அரசாங்கத்தின் பொக்கிஷத்திலுள்ள பணம் பொது மக்களின் பணம் என்பதை உணர்ந்து ஜாக்கிரதையாய்ச் செலவழிக்கக் கூடியவர்; பொதுப் பணத்தை விரயம் செய்யாதவர்; சுயநலம் என்பதையே அடியோடு மறந்து, பொது நன்மையையே பிரதானமாகக் கருதப் பயின்றவர்; காங்கிரஸ் இலட்சியங்களை உண்மையாகப் பின்பற்றி நடப்பவர்; ஆனால் காரிய சாத்தியமற்ற பைத்தியக்காரத் திட்டங்களில் இறங்காதவர்; அவசரப்படாமல் நிதானித்து யோசித்து முடிவு செய்யக் கூடியவர்.

ஆங்கிலப் படிப்பையும், அதிகப் பிரசங்க சக்தியையும் காட்டிலும் மேற்கூறிய குணங்கள்தான் பிரதம மந்திரி பதவிக்கு அவசியம் என்று நாம் கருதுகிறோம்.

இந்தியாவின் இடைக்கால சர்க்காரில் மௌலானா ஆஸாத் கல்வி மந்திரி ஸ்தானம் வகிக்கலாம் என்றால், ஓமந்தூர் செட்டியார் சென்னைப் பிரதம மந்திரி பதவியைக் கட்டாயம் வகிக்கலாம்.

அதோடு புதிய பிரதம மந்திரி தமக்கென்று வைத்துக் கொண்டிருக்கும் இலாகாக்களைக் கவனித்தால், அவரிடம் அடக்கம் என்னும் பெருங் குணம் நன்கு பிரகாசிப்பதைக் காணலாம். வெற்றிக்குரிய சிறந்த சாதனங்களில் அடக்கம் ஒரு முக்கியமான சாதனம் அல்லவா?

* * *

ஓமந்தூர் செட்டியார் தெரிந்தெடுத்திருக்கும் சகாக்களில் டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன், ஸ்ரீ கோபால ரெட்டி ஆகியவர்கள் ராஜாஜி மந்திரி சபையில் இருந்து நல்ல பெயர் பெற்றவர்கள்; வாக்கு வன்மையும் நிர்வாக அநுபவமும் நிரம்ப வாய்ந்தவர்கள்.

புதிய மந்திரிகளான ஸ்ரீ கலா வெங்கட்ராவ், ஸ்ரீ சந்திரமௌளி, ஸ்ரீ சீதாராம ரெட்டி ஆகியவர்கள் நல்ல திறமைசாலிகள் என்று பெயர் பெற்றவர்கள்.

ஸ்ரீ பக்தவத்ஸலம், ஸ்ரீ அவிநாசிலிங்கம், ஸ்ரீ டேனியல் தாமஸ் ஆகியவர்கள் பழைய ஊழல் நிறைந்த மந்திரி சபையிலே கூடத் தங்கள் திறமை ஓரளவு வெளிப்படச் செய்திருக்கிறார்கள். புதிய மந்திரி சபையில் அவர்களுடைய திறமை இன்னும் நன்கு பிரகாசிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மொத்தத்தில் புது மந்திரி சபை பழைய மந்திரி சபையை விடச் சிறந்தது என்பதில் ஐயமில்லை. அதோடு, காங்கிரஸ் மேலிடத்தின் அங்கீகாரம் பெற்று, காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, அகில இந்தியத் திட்டங்களோடு ஒத்துழைத்துப் புதிய மந்திரிசபை வேலை செய்ய முன் வந்திருக்கிறது.

எனவே, சென்று போன பழைய அத்தியாயத்தைக் காட்டிலும் ஆரம்பித்திருக்கும் புதிய அத்தியாயம் சிறந்ததாகத்தான் இருக்கவேண்டும். ஆனாலும் புது அத்தியாயத்தைக் குறித்து அதிகமாக சந்தோஷப் பட்டுப் பின்னால் ஏமாற்றமடைய நாம் தயாராயில்லை. புது மந்திரி சபையின் மூலம் பிரமாத அபிவிருத்தியைச் சீக்கிரத்திலே நாம் எதிர்பார்க்கவுமில்லை.

ஏனென்றால், சென்ற பத்து மாதத்து ஊழல்களையெல்லாம் சீர்திருத்தி செய்து, புதிய முறையில் புதிய திட்டங்களை வகுக்க

வேண்டிய கடமை புது மந்திரி சபையின் தலைமேல் சுமந்திருக்கிறது.

எந்தக் காரியத்தையும் ஆரம்பத்திலிருந்து நன்றாகச் செய்வது எளிது; ஆனால் ஒரு தடவை காரியம் குளறிப் போய் விட்டால் பிற்பாடு சிக்கல் எடுத்து சரிக் கட்டுவது எளிதன்று.

இராட்டையில் நூற்கும் நூலைக் கதிரிலிருந்து ஒழுங்காகச் சிட்டத்தில் சுற்றுவது சுலபம். ஆனால் நூல் கண்டை யாராவது விஷமம் செய்து சிக்கலாக்கி விட்டால், அதைச் சரிப்படுத்திச் சிட்டத்தில் சுற்றுவது ரொம்பத் தொல்லையான காரியம்.

சென்னை மாகாணத்து அரசியல் நிர்வாகம் சென்ற பத்து மாதத்தில் மிக்க ஊழலாய்ப் போயிருக்கிறது. பல விதத்திலும் சிக்கலடைந்திருக்கிறது. இதைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துவது எளிதன்று. ஒரு சிக்கலை எடுத்தால் இன்னொரு சிக்கல் ஏற்பட்டுத் தொல்லைப் படுத்தும்.

உதாரணமாக, தொழிலாளர் தகராறுகளை எடுத்துக் கொள்வோம். ஆரம்பத்திலேயே உறுதியுடன் ஒரு திடமான கொள்கையைச் சர்க்கார் அனுசரித்துப் பொருள் உற்பத்தி தடைப் படாமல் காத்து, தொழிலாளர் நன்மைகளையும் கவனித்திருந்தால், கெடுநிலும் நிலைமையைச் சரிக்கட்டிக் கொண்டு போவது எளிதாயிருக்கும்.

ஆனால் மகானுபாவர் வி. வி. கிரி அவர்கள் தொழில் இலாகாவை எவ்வளவு சீர்கேடு செய்யலாமோ அவ்வளவும் செய்துவிட்டார். ஸ்ரீ பிரகாசம் காருவும் அடிக்கடி தலையிட்டுக் கூடுமான வரையில் நிலைமையைக் குளறுபடிகேஷன் செய்திருக்கிறார்.

இம்மாதிரிதான் எந்தக் காரியத்திலே புகுந்தாலும் பழைய சஞ்சித கர்மங்கள் வந்து தொல்லை கொடுக்கும்.

* * *

புது மந்திரி சபை எவ்வளவு தூரம் வெற்றியடையும் என்பதை யோசிக்கும் போது, இப்போதுள்ள சென்னைச் சட்ட சபை அங்கத்தினர் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

மார்ச்சு 8ஆ கூட்டத்தில் "நம்பிக்கையில்லை"த் தீர்மானத்துக்கு 134 பேர் வோட்டுக் கொடுத்தார்கள். பத்து நாளைக்குள்ளே அவர்களில் 18 பேர் மாறிப் போய் விட்டார்கள். கடைசிக் கூட்டத்தில் 116 பேர்தான் வோட்டுக் கொடுத்தார்கள்.

தற்போதுள்ள எம். எல். ஏ.க்களில் சிலர் பிரகாசம் சர்க்காரிடம் பெர்மிட் வாங்கி விற்று ருசி கண்டவர்கள் என்று பகிரங்கமாக நாடெங்கும் பேசிக் கொள்ளப்படுகிறது. அவர்கள் நேர்மையுள்ள ஆட்சியைச் சகித்துக் கொண்டிருப்பார்களா?

எனவே, எத்தனையோ வகைப்பட்ட தொல்லைகளையும் எதிர்ப்புகளையும் சங்கடங்களையும் புது மந்திரிகள் எதிர்பார்க்க வேண்டும். அவ்வளவுக்கும் ஈடு கொடுத்து, சென்னை மாகாணப் பொது மக்களின் நன்மைகளை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும்.

புதிய மந்திரி சபை பிரம்மப் பிரயத்தனம் செய்தால்தான் சென்னை மாகாணத்துக்கு ஏற்பட்டுள்ள அவகேடு நீங்கிப் பழைய மதிப்பையும் மரியாதையையும் பெறமுடியும்.

* * *

புது மந்திரி சபை ஏற்பட்ட பிறகு சென்னைச் சட்டசபையின் நடவடிக்கைகளையும் மந்திரிகளின் மற்றக் காரியங்களையும் கவனித்தால் ஓரளவு நமக்கு நம்பிக்கை உண்டாகத்தான் செய்கிறது.

ஸ்ரீ பிரகாசம் காருவின் அவதூறு நிறைந்த பிரசங்கத்துக்குப் பதிலாக டாக்டர் சுப்பராயன் நிகழ்த்திய கௌரவமான பேச்சு புது மந்திரி சபையின் அந்தஸ்தை உடனே உயர்த்தி விட்டிருக்கிறது.


பொதுவாக அங்கத்தினரின் கேள்விகளுக்குப் புது மந்திரிமார்கள் அளிக்கும் பதில்கள் உயர்தரமாக அமைந்து சட்ட சபை இழந்து விட்ட கௌரவத்தை அதற்குத் திரும்ப அளித்து வருகின்றன.

ஆலயப் பிரவேச மசோதாவைப் பிரேரணை செய்து டாக்டர் ராஜன் நிகழ்த்திய அற்புதமான பிரசங்கம் பழைய ராஜாஜி காலத்துச் சட்டசபை நடவடிக்கைகளை நினைவூட்டுவதாயிருக்கிறது.

* * *

புதிய அத்தியாயத்தை நாம் வரவேற்கிறோம். ஓமந்தூர் மந்திரி சபைக்கு வாழ்த்துக் கூறுகிறோம். அதன் வெற்றிக்காகப் பிரார்த்தனையும் செய்கிறோம்.

அதோடு இன்னொரு விஷயமும் குறிப்பிட விரும்புகிறோம். இந்தப் புது மந்திரி சபை நிலைத்து நின்று வெற்றியடையா விட்டால், இப்போதுள்ள சென்னைச் சட்ட சபை அங்கத்தினரைக்கொண்டு இன்னொரு மந்திரி சபை ஏற்படுவதற்கு இடம் இல்லை. இந்தச் சட்டசபையையே கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்தும்படிதான் நேரிடும்.



ஆடல் பாடல்



தியாகராஜர் விடுதலை

இந்தியா தேசம் அடுத்த 1948-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் தேதி யன்று பூரண சுதந்திரம் அடையப் போகிறது. அதே தேதியில் திருவாங்கூர் சாம்ராஜ்யமும் தனிப்பட்ட பரிபூரண சுதந்திரம் அடையப் போகிறது.

ஆகவே, திருவையாறு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் விடுதலையைக் குறித்து நாம் இப்போது யோசிப்பது நியாயமாகும்.

மார்ச்சு மாதம் 18உ "ஹிந்து" பத்திரிகையின் 7-ம் பக்கத்தில் சங்கீத கலாநிதி ஸ்ரீ பல்லடம் சஞ்சீவி ராவ் அவர்களின் பெயரால் வெளியாகியிருக்கும் செய்தியை நமது நேயர்களில் பலர் கவனித்திருக்கலாம். கவனியாதவர்கள் மேற்படி பழைய பத்திரிகையைத் தேடிப் பிடித்து இப்போதாவது கவனிக்கும்படி கோருகிறோம். அச் செய்தியின் சாராம்சம் பின்வருமாறு:—

குலமங்கலம் கிராமத்தில் பிப்ரவரி மாதம் 24உ யன்றும் 25உ யன்றும் சங்கீத கலாநிதி பல்லடம் சஞ்சீவிராயர் அவர்கள் தலைமையில் சங்கீத வித்வான்களும் சங்கீத அன்பர்களும் அடங்கிய கூட்டம் ஒன்று நடந்தது. இந்தக் கூட்டத்துக்குச் சங்கீத ரத்னாகரம் ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், சங்கீத பூஷணம் ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரியார், நாதஸ்வர வித்வான் ஸ்ரீ திருவீழிமிழலை நடராஜசுந்தரம் பிள்ளை, பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தின அம்மாள், சாத்தூர் ஸ்ரீ சுப்பிரமண்ய ஐயர் முதலிய பல வித்வான்களும் ரஸிகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்தில் ஏக மனதாகப் பின் வரும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

(1) திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் ஆராதனை உற்சவமும் அச் சமயம் நடக்கும் சங்கீதக் கச்சேரிகளும் பக்தியே பிரதானமாகக் கொண்டு நடத்தப்பட வேண்டும்; (2) ஆராதனை உற்சவத்துக்குப் பெரிய மனிதர்களை அழைத்து ஆரம்பித்து வைக்கும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்; (3) ஆராதனை மகோற்சவ சபையின் அங்கத்தினரும் உத்தியோகஸ்தர்களும் சங்கீத வித்வான்களாகவே இருக்க வேண்டும்; (4) வரைதுறை யில்லாமல் மிகச் சொற்ப நேரக் கச்சேரிகள் வைப்பதினால் சங்கீதத்தின் மகிமை குறைந்து போகிறபடியால் அம்மாதிரி கச்சேரிகளை நிறுத்திவிட வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை மேற்கூறிய பிரபல சங்கீத வித்வான்கள் ஏகமனதாக நிறைவேற்றியிருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. இத்தனை கால தாமதமாக நிறைவேற்றினார்களே என்பது ஒன்றுதான் சிறிது வியப்பான விஷயம். வெகு காலத்துக்கு முன்பே நிறைவேற்றியிருக்கவேண்டியவை.

1939-ம் வருஷத்தில் தென்னாட்டுச் சங்கீத வித்வான்கள் ஸ்ரீ தியாகராஜ மகோற்சவத்தைப் பெரிய கோஷ்டி, சின்ன கோஷ்டி வித்தியாசமில்லாமல் ஒன்றுபட்டு நடத்த முன் வந்தபோது சங்கீத ரஸிகர்கள் எல்லாரும் மிக்க மகிழ்ச்சி யடைந்தார்கள்.

அந்த மகிழ்ச்சி அதற்கு அப்புறம் ஒரு வருஷந்தான் நீடித்திருந்தது.

வரவர வெளியார்களின் நாட்டாண்மையும், உத்தியோகஸ்தர்களின் அதிகார அமுலும், குட்டி தேவதைகளின் அதிகப் பிரசங்கமும் வளர்ந்து பெருகி, ஸ்ரீ தியாகராஜ ஆராதனை உற்சவத்தில் முன்பிருந்த பக்தி சிரத்தையும் சங்கீதத்தின் மகிமையும் குறைந்து கொண்டு வந்தன.

சங்கீத வித்வான்களுக்குள்ளே சின்ன கோஷ்டி, பெரிய கோஷ்டி என்னும் வேற்றுமை இருந்த காலமே மேல் என்று ஆகிவிட்டது!

சின்ன கோஷ்டி, பெரிய கோஷ்டி என்று இருந்ததனால் என்ன? இரண்டு கோஷ்டிக்காரர்களும் போட்டி போட்டுக் கொண்டு உற்சாகமாகவும் பக்தி சிரத்தையோடும் உற்சவத்தை நடத்தினார்கள்.

அதற்கேற்றபடி சங்கீதக் கச்சேரிகளும் அமோகமாய் அமைந்தன.

பெரிய வித்வானோ, இளம் வித்வானோ, யார் கச்சேரி செய்த போதிலும், சபையில் மேடைமேல் ஸ்ரீ சஞ்சீவிராயர், குலமங்கலம் பாகவதர், காயக சிகாமணி, டைகர் வரதாச்சாரியார் முதலிய பெரியோர்கள் உட்கார்ந்து சிரக்கம்பம் செய்தும், 'சபாஷ்' போட்டும் உற்சாகப் படுத்தினார்கள்.

சென்ற ஏழு வருஷ காலமாக அதெல்லாம் மாறிப் போய் விட்டது.

ஆராதனை உற்சவத்தில் சங்கீத வித்வான்களுக்கு இருந்த அக்கிரஸ்தானம், உரிமை, பொறுப்பு எல்லாம் போய்விட்டன. வக்கீல்களும், பத்திரிகாசிரியர்களும், ஐ. சி எஸ். காரர்களும், முதலாளிமார்களும் தலையிட்டு அதிகாரம் செலுத்தத் தொடங்கினார்கள். அவர்களுடைய சில்லறைத் தேவதைகள் அட்டகாசமே செய்தார்கள்.

இதெல்லாம் சங்கீத வித்வான்களில் மிகப் பலருக்குப் பிடிக்காமலிருந்த போதிலும், அவர்களுடைய பரம்பரைப் பண்பாட்டின் காரணமாக, வெளியில் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் பொறுக்காமல்போன பிறகுதான் ஸ்ரீ பல்லடம் சஞ்சீவிராயர், அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார், பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் முதலியவர்கள் மேற்கண்டபடி தீர்மானம் செய்திருக்க வேண்டும்.

மேற்படி சங்கீத சிரோமணிகளின் ஏகமனதான தீர்மானங்களைச் சங்கீத ரஸிகர்களில் பெரும்பாலோர் பரிபூரணமாக ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதிகார அமுல், ஆர்ப்பாட்டம், பணம் பதவி வித்தியாசம் முதலியவற்றை யெல்லாம் மற்ற சங்கீத ஸ்தாபனங்களுடன் வைத்துக் கொள்ளலா மல்லவா?

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளையும், அவருடைய சமாதி ஸ்தலத்தையும், ஆராதனை உற்சவத்தையும், அது சம்பந்தமான சகல ஏற்பாடுகளையும் சங்கீத வித்வான்களுக்கே முழுதும் விட்டு விடுவதுதான் உசிதமாகும்.

முன்னம் நடந்ததுபோல் சங்கீத வித்வான்களுக்குள் வேற்றுமையும் போட்டியும் ஏற்பட்டால் கூடப் பாதகமில்லை. இப்போதுள்ள நிலைமையைவிட அது எவ்வளவோ மேலா யிருக்கும். சங்கீத வித்வான்களுக்குள் போட்டி ஏற்பட்டால், உற்சவம் இன்னும் விமரிசையாகவும் பக்தி சிரத்தையோடும் நடப்பதற்கே ஏதுவாகும். சங்கீத வித்வான்கள் இது சம்பந்தமாக மேலும் கிளர்ச்சி செய்வதற்கும் மனஸ்தாபங்கள் வளர்வதற்கும் இடம் கொடாமல், வைதிகர்கள் ஆராதனைக் கமிட்டி முதலியவற்றிலிருந்து விலகிக் கொண்டு ஸ்ரீ தியாகராஜருக்கு விடுதலை அளித்து விடுவது மிகவும் உசிதமா யிருக்கும்.

சிருதி மணி மாலை

சங்கீத வித்வான்கள் அல்லாதவர்களின் ஆதிக்கத்திற்கு ஆராதனை மகோற்சவக் கமிட்டி உட்பட்டதினால் விளைந்த பலன்களுக்கு இரண்டு உதாரணங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

"ஸ்ரீ தியாகராஜரின் நூற்றாண்டு விழா வரப்போகிறது. அதைத் திருவையாற்றில் பிரமாதமாகக் கொண்டாட வேண்டும்" என்று ஒன்பது வருஷமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக, நூற்றாண்டு விழா நடத்தவேண்டிய வருஷம் வந்தது. இந்தியாவெங்கும் தென்னிந்தியர்கள் உள்ள இடங்களில் எல்லாம் மேற்படி உற்சவத்தை விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஆனால், திருவையாற்றில் மட்டும் இந்த வருஷத்தில் உற்சவம் வெகு சாதாரணமாகவே நடந்ததென்று தெரிகிறது.

இதற்குக் காரணம், ரேஷன் தொந்தரவு என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், சென்னை சர்க்கார் ஸ்ரீ தியாகராஜ உற்சவத்துக்காக இருநூறு மூட்டை அரிசிக்கு விசேஷ அனுமதி கொடுத்திருந்தார்கள். அந்த 200 மூட்டை அரிசியும் உபயோகப் படாமல் திருப்பி அனுப்பப்பட்டது.

எனவே, நூற்றாண்டு உற்சவம் விமரிசையாக நடைபெறாததற்குக் காரணம் அரிசிப் பஞ்சம் அல்ல; நிர்வாகத்தில் ஏற்பட்ட குறைபாடாகத்தான் இருக்க வேண்டும்.

இரண்டாவது உதாரணம், மேலே சொன்னதைக் காட்டிலும் முக்கியமான

காரியம்; சாக்குப் போக்குச் சொல்ல தக்க இடமில்லாத காரியம்.

"வரப்போகும் ஸ்ரீ தியாக ராஜ நூற்றாண்டு மகோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ தியாக ராஜரின் கிருதிகளை யெல்லாம் சேர்த்து ஸ்வரப்படுத்தி நல்ல முறையில் புத்தகங்களாக வெளியிட வேண்டும் என்று ஸ்ரீ தியாகப் பிரம்ம மகோத்ஸவ சபை 1941-ம் வருஷம் அக்டோபர் மாதத்தி லேயே தீர்மானித்தது. அதற்காக நாலு அங்கத்தினர் அடங்கிய ஒரு சப் கமிட்டியையும் நியமித்தது. ஆனால் சப் கமிட்டியானது அதற்காக ஒரு வேலையும் செய்யவில்லை. சபையும் பின்னர் அதைப்பற்றிக் கவனிக்க வில்லை. ஆகக் கூடி, உற்சவம் கொண்டாடு வதைக் காட்டிலும் மிகவும் முக்கியமான இந்த மகத்தான கைங்கரியம் நடைபெற வில்லை." — இப்படியாக நாம் சொல்ல வில்லை. ஸ்ரீ கே. சீனிவாசன் ("ஹிந்து"), ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் ("சுதேசமித்திரன்"), ஸ்ரீ என். ரகுநாதன், (தென்னிந்தியப் பத்திரிகை சம்மேளனத்தின் தலைவர்), சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரியார், பாபநாசம் சிவன், பாரு பள்ளி ராமகிருஷ்ணய்ய பந்துலு முதலிய இன்னும் பலர் கையொப்பமிட்ட ஒரு துண்டுப் பிரசுரம் சொல்லுகிறது. மேலும் அந்தப் பிரசுரம் என்ன சொல்கிறது என்றால்:—

பெரிய பெரிய மனிதர்களும் பிரமுகர்களும் அடங்கிய மேற்படி தியாகப்பிரம்ம மகோத்ஸவ சபையும், அதன் சப் கமிட்டியும் செய்யத் தவறிய பரம முக்கியமான காரியத்தை ஒரு தனிப்பட்ட மனிதர்,—அதிலும் ஒரு ஏழை ஆசிரியர், — ஏற்றுக் கொண்டு நடத்த முன்வந்திருக்கிறாராம்! அந்தத் தீரரின் பெயர் ஸ்ரீ ஆர். ரங்க ராமானுஜ அய்யங்கார் பி. ஏ. எல். டி!

தொழிலினால் பள்ளிக்கூட ஆசிரியர் என்றாலும், ஆத்மார்த்தமாகச் சங்கீதக் கலையை நன்கு பயின்று தேர்ச்சி பெற்ற வைணிக வித்வான் ஸ்ரீ ரங்க ராமானுஜ அய்யங்கார். அவருடைய பெயர் சங்கீத ரஸிகர் பலருக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கக் கூடியதுதான். பாபநாசம் சிவன் அவர்களுடைய கீர்த்தனங்களையும் ஸ்ரீ புரந்தர தாஸரின் கீர்த்தனங்களையும் ஸ்வரப்படுத்திக் "கீர்த்தன மாலை" "புரந்தர மணி மாலை" என்னும் பெயர்களுடன் வெளியிட்டுச் சங்கீதக் கலைக்கு அரிய சேவை செய்தவர். அவர்தான் இப்போது ஸ்ரீ தியாகராஜருக்கும் சேவை செய்ய முன் வந்திருக்கிறார். "கிருதி மணி மாலை" என்ற பெயருடன் 600 பக்கங்கள் கொண்ட நாலு புத்தகங்களை வெளியிடப் போகிறார். முதல் மூன்று புத்தகங்களிலும் ஸ்ரீ தியாக ராஜரின் 400 கீர்த்தனங்கள் அடங்கி யிருக்கும். சாஹித்யம் தமிழ் எழுத்திலும் தெலுங்கு எழுத்திலும் அச்சிடப்பட்டு விவரமான ஸ்வரங்களும் ராக லட்சணங் களும் அடங்கி யிருக்கும். இவைகளோடு ஸாஹித்யங்களின் அர்த்தமும் தரப்படும். நாலாவது புத்தகத்தில், தீக்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரி, சுப்பராய சாஸ்திரி, க்ஷேத்ரக் ஞர் உருப்படிகள் மொத்தம் இருநூறு மேற்கண்ட முறையில் அச்சிடப்படும்.

இது ஒரு 'மகத்தான சேவை' என்று சொன்னால், அது மிகையாகாது. எப்பேர்ப் பட்ட நிபுணரா யிருந்தாலும் ஒரு கீர்த் தனத்தை முறைப்படி ஸ்வரப்படுத்தி அர்த்தம் எழுதி அச்சுக்குத் தயார் செய் வதற்கு மிக்க சிரமப்பட்டே ஆகவேண்டும். ஸ்வரப்படுத்திய கீர்த்தனங்களுக்கு 'ப்ரூப்' பார்ப்பது ஒரு அசுர வேலை; எவ்வளவோ பொறுமையும் திறமையும் அதற்குவேண்டும்.

இவ்வளவையும் ஒரு தனி மனிதர் ஏற்றுக் கொண்டு செய்வதென்பது பெரிதும் பாராட்டுதற்குரிய விஷயம். ஸ்ரீ தியாக ராஜரிடம் இருதய பூர்வமான பக்தியும் சங்கீதக் கலையில் உண்மையான அன்பும் உள்ளவர்கள்தான் இம்மாதிரி கைங்கரி யத்தை ஏற்றுக் கொண்டு செய்ய முடியும்.

எனவே, அத்தகைய பணியை ஏற்றுக் கொண்டிருப்பவருக்குச் சங்கீதப் பிரியர்கள் கூடுமான எல்லா உதவியும் செய்ய வேண்டுமென்று "ஹிந்து" ஆசிரியர் முதலியோர் கேட்டுக் கொண்டிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. முதற் புத்தகம் ஏப்ரல் 14உ தமிழ் வருஷப் பிறப்பன்று வெளியாகும் என்றும், திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜரின் சந்நிதியில் சமர்ப்பிக்கப் படுமென்றும் அறிகிறோம். மேலும் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றிய ஸ்ரீ தியாக ராஜ ஸ்வாமிகளின் அற்புத சரித்திரம் முதற் புத்தகத்தில் அடங்கி யிருக்கும் என்று தெரிகிறது. இத்தகைய அருமை யான புத்தகத்தை வாங்க விரும்புவோரும் வேறு வகைகளில் உதவி செய்ய விரும்பு வோரும் பின்வரும் விலாசத்துக்கு எழுதிக் கொள்ள வேண்டுகிறோம்:—ஸ்ரீ ஆர். ரங்க ராமானுஜ அய்யங்கார், "சம்பத்," வேட் காலனி, எழும்பூர், சென்னை.

அகில ஆசிய மகாநாடு

உலக சரித்திரத்தில் இதற்குமுன் என்றும் கண்டிராத மகத்தான திருவிழா டில்லிமா நகரில் நடை பெற்றது. திருவிழாவுக்குத் தலைமை வகித்தவர் கவியரசி ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

ஆசியாவின் சுமார் 150 கோடி ஜனங்களின் சுதந்திரத்துக்கும் சுபிட்சத்துக்கும் அஸ்திவாரம் அமைக்கும் திருப்பணிக்காகச் சகல ஆசிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்தார்கள்.









மகாநாட்டில் மாதர் சேவைப் படையினர் சிறந்த தொண்டு புரிந்தனர்.

* * *

வரிசை வரிசையாகப் பல தேசப் பிரதிநிதிகள் வந்த வண்ண மிருந்தனர். கீழே படம் எடுக்கத் தயாராய் நிற்பவர்கள், டச்சுக்காரர்களை எதிர்த்து வீரப் போர் புரிந்து வரும் இந்தோனேஷியாக்காரர்கள்.









இந்தப் பிரதிநிதிகளின் புன்முறுவல் ஆசியாவின் வருங்கால மகோன்னதத் தைப் பிரதி பலிக்கின்றது.

நீலக் கண்ணாடி அணிந்துள்ள சீனப் பெண்மணி சீனாவில் மகவும் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்; சிறந்த அரசியல் வாதி; சீனப் பிரதிநிதி சபை அங்கத்தினர்.






மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமதி ஸரோஜினியும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் சர் ஸ்ரீராமும் பிரதிநிதிகளை வரவேற்று அழைத்துச் செல்லுகின்றனர்.

பண்டித ஜவாஹர்லால் நேரு சங்கநாதம் செய்து மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

பிரம்மாண்டமான பந்தலில் பதினாயிரம் பேர் வீற்றிருந்து மேற்படி சங்கநாதத்தைக் கேட்டார்கள்.







சென்னை மாகாணத்திற்கும் சமஸ்தானங்களுக்கும் ஸ்டாக்கிஸ்ட்டுகள் :

ஹிகின்பாதம்ஸ், சென்னையும், பிராஞ்சுகளும்

அக்கப் போர்

"சக்கைப்போடு"

சென்ற மார்ச்சு 31௳ சென்னை நகர் எங்கும் "பலே டாக்டர் சுப்பராயன்!" "சபாஷ் டாக்டர் சுப்பராயன்!" என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வேளை நமது உள்நாட்டு மந்திரி சங்கடமான அரசியலை விட்டுச் சங்கீதக் கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்டாரோ என்று நேயர்கள் சந்தேகிக்க வேண்டாம். 31௳ சென்னையில் நடந்த பொது வேலை நிறுத்தம் சம்பந்தமாக டாக்டர் சுப்பராயன் செய்திருந்த திறமையான போலீஸ் ஏற்பாடுகள் தான் அத்தகைய "பலே!" "சபாஷ்!" பட்டங்களை அவருக்கு வாங்கிக் கொடுத்தன!

அன்று சென்னையில் ஏக ரகளைகள் நடக்கும் என்று பொதுவாக எதிர்பார்க்கப் பட்டது. அன்று நடக்கப்போகும் அட்டூழியங்களைப் பற்றி ரோமம் சிலிர்க்கும்படியான பயங்கர வதந்திகள் நகரமெங்கும் பரவி யிருந்தன.

மேலும் பஞ்சாப் முதலிய இடங்களில் நடந்ததாகப் பத்திரிகைகளில் வந்திருக்கும் கோர சம்பவங்களைப் பற்றியும் ஜனங்கள் படித்திருக்கிறார்கள் அல்லவா?

அதிர்ஷ்டவசமாக அப்படி யொன்றுமே நடைபெறவில்லை. சில மோட்டார் பஸ்களின் கண்ணாடிக் கதவுகள் உடைந்ததைத் தவிர வேறு சேதமே கிடையாது.

இப்படி எல்லாம் நன்றாக முடிந்ததற்குக் காரணம், டாக்டர் சுப்பராயன் முன் ஜாக்கிரதையாகச் செய்திருந்த போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடுகள் தான் என்பது பகிரங்க இரகசியம்.

ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். 31௳ சாயங்காலம் 4 மணிக்கு புரசவாக்கத்தில் ஒரு கல்லெறி சொறுக்கல் தொண்டு ஆரம்பமாயிற்று. அங்கு நின்ற போலீஸ்காரர் 'விஸில்' ஊதினார். அதைக் கேட்ட அரை பர்லாங்கு தூரத்தில் நின்ற போலீஸ்காரர் விஸில் ஊதினார். அதைக் கேட்ட அடுத்த அரை பர்லாங்கு தூரத்தில் நின்ற போலீஸ்காரர் விஸில் ஊதினார். இப்படியாக முதல் விஸில் ஊதப்பட்ட 15 நிமிஷத்துக்குள் சென்னைப் பட்டணம் முழுவதிலும் நின்ற போலீஸ்காரர்கள் விஸில் ஊதி ஜாக்கிரதை யடைந்து எப்பேர்ப்பட்ட கலவரத்தையும் கலகத்தையும் தாக்குதலையும் தீ வைத்தலையும் தடுத்துச் சமாளிக்கத் தயாராகி விட்டார்கள்!

முன் ஜாக்கிரதை என்றால், இதுவல்லவா முன் ஜாக்கிரதை! தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதற்கு ஓட்டமாய் ஓடும் பழைய முறைக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

"சபாஷ் சுப்பராயன்!" என்று ஒரு தடவைதானா சொல்லலாம்? நூறு தடவை சொல்லலாமே?

✶

பக்கிங்காம் கர்னாடிக் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒரு சமமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சிறைப்பட்ட ஸ்ரீ அந்தோணிப் பிள்ளைக்குப் பதிலாக ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வேலை நிறுத்தத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

புது மந்திரி சபையில் சிலர், — முக்கியமாக டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன் ஆகியவர்கள், — ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு அந்நியோந்ய சிநேகிதர்கள்.

அத்தகைய மந்திரிசபை திரு. வி.க. அவர்களைச் சிறைப்படுத்துமா?—அப்படியானால் ரொம்பத் தமாஷாய்த்தா னிருக்கும்.

திரு. வி. க. அவர்கள் முப்பது வருஷத்துக்கு முன்னால் "தேசபக்தன்" ஆரம்பித்த காலத்தி லிருந்து அரசியல் உலகிலும் தொழிலாளர் உலகிலும் முன்னணியில் நின்று வந்தும் சிறைப் படாமலே தப்பித்து வந்திருக்கிறார்!

இப்போது அவருடைய பழைய சகாக்களான டாக்டர் ராஜன், டாக்டர் சுப்பராயன் இவர்களால் சிறைக்கு அனுப்பப்படும் சிறப்பைப் பெறப்போகிறாரோ, என்னமோ?

✶

இதற்கு மேலே இந்த இதழில் அக்கப் போருக்கு இடமில்லை என்று ஆசிரியர் தடை உத்தரவு போடுகிறார். அதைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக இத்துடன் நானும் வேலை நிறுத்தம் செய்துவிடுகிறேன்!


ஜூபிடர்ஸ்
ராஜகுமாரி
A.S.A சாமி
பாட்டு நாராயணகவி
JUPITER PICTURES CIRCUIT
ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ் — திருப்பூர்



-சந்திரா-

18. உலகம் சுழல்கிறது!

இரண்டு தினங்களுக்குப் பிறகு மாறனேந்தல் உலகநாதத் தேவரைச் சோலைமலை மகாராஜா சந்தித்த போது, அவர் முற்றும் புது மனிதராயிருந்தார். அவர்களுடைய சந்திப்பு பிரிட்டிஷ் படையின் மேஜர் துரையின் முன்னிலையில் துரையின் கூடாரத்தில் நடைபெற்றது. உலகநாதத் தேவரின் கைகளை மணிக் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. அவரையும் இன்னும் சில இராஜாங்கத் துரோகிகளையும் என்ன செய்வது என்பது பற்றி மேலாவிலிருந்து வரவேண்டிய உத்தரவை மேற்படி மேஜர் துரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

சோலைமலை மகாராஜா மேற்படி மேஜரால் தாம் ஏமாற்றப்பட்டதையும், உலகநாதத் தேவர் பிடிபட்டதற்குத் தாமே காரணம் என்பதையும் எண்ணி எண்ணி மனம் புண்ணாகியிருந்தார். எனவே, உலகநாதத் தேவரைக் கண்டதும் அவருக்கு விம்மலும் கண்ணீரும் பொங்கிக் கொண்டு வந்தது. அந்த வெள்ளைக்காரன் முன்னிலையில் தம்முடைய மனத் தளர்ச்சியைக் காட்டக் கூடாதென்று தீர்மானித்துப் பல்லைக் கடித்து அடக்கிக் கொண்டார். பேச நா எழாமல் மகாராஜா தவிப்பதைப் பார்த்த உலகநாதத் தேவர், "மாமா! தாங்களே இப்படி மனந் தளர்ந்தால் இளவரசிக்கு யார் ஆறுதல் சொல்வார்கள்?" என்றார்.

தேவரின் வார்த்தைகள் சோலைமலை அரசரின் மௌனத்தைக் கலைத்தன.

"ஆறுதல் சொல்லுவதா? மாணிக்க வல்லிக்கு நான் என்ன ஆறுதலைச் சொல்லுவேன்? அவள் முகத்தைப் பார்க்கவே எனக்குத் தைரியம் இல்லையே!—தம்பி! ஆயிரம் வருஷம் தவம் கிடந்தாலும் உன்னைப் போன்ற ஒரு வீரன் கிடைக்க மாட்டானே? மாறனேந்தல் - சோலைமலை வம்சங்கள் இரண்டையும் நீ விளங்க வைத்திருப்பாயே? அப்படிப்பட்டவனை மூடத்தனத்தினால் இந்தப் பாவி காட்டிக் கொடுத்து விட்டேனே? இந்த வெள்ளைக்காரப் பாதகன் என்னை ஏமாற்றி விட்டானே? அப்பனே! வெள்ளைக்கார சாதியைப் பற்றி நான் எண்ணியதெல்லாம் பொய்யாய்ப் போயிற்றே? நீ சொன்னது அவ்வளவும் மெய்யாயிற்றே! எந்த வேளையில் இந்தப் படுபாவி என் கோட்டை வாசலைத் தாண்டி உள்ளே வந்தானோ, அன்றைக்கே உன்னுடைய குலத்துக்கும் என்னுடைய குலத்துக்கும் சனியன் பிடித்து விட்டது!......"

மேஜர் துரை அந்தப் பக்கங்களில் பழகிப் பழகிக் கொஞ்சம் தமிழ் தெரிந்து கொண்டிருந்தான். எனவே, சோலைமலை ராஜாவின் ஆத்திரமான பேச்சைக் கேட்டுச் சிரித்தான். அவனுடைய சிரிப்பு சோலைமலை மகாராஜாவுக்கு நெருப்பா யிருந்தது.

"பாவி! என் அரண்மனைச் சோற்றைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம் செய்தாயே? செய்வதையும் செய்துவிட்டு இப்போது ஹிஹி என்று சிரிக்கிறாயே?" என்றார் சோலைமலை மன்னர்.

"துர்ரோகமா? என்னத் துர்ரோகம்? யாருக்குத் துர்ரோகம்? நீர்தானே இந்த டிரெய்டரை எப்படியாவது காப்சர் செய்து ஹாங்க் பண்ணியே ஆகவேணும் என்று பிடிவாதம் செய்தீர்?" என்றான் மேஜர் துரை.

இதைக் கேட்டதும் சோலைமலை அரசரின் முகம் வெட்கத்தால் சிறுத்துக் கோபத்தால் கறுத்தது. அதைக் கவனித்த மாறனேந்தல் அங்கேயே ஏதாவது விபரீதம் நடந்து விடாமல் தடுக்க எண்ணி, "மாமா! நடந்தது நடந்து விட்டது. இனிமேல் அதைப் பற்றிப் பேசி என்ன பயன்? இந்த வெள்ளைக்காரன் என்னை விடப்போவதில்லை. கட்டாயம் தூக்குப் போட்டுக் கொன்று விடுவான். அதைப் பற்றி எனக்குக் கொஞ்சமும் கவலையில்லை. தங்களுடைய நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றேனே, அதுவே எனக்குப் போதும். மனத் திருப்தியுடன் சாவேன். தங்கள் குமாரியிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள்: விதியை மாற்ற யாராலும் முடியாது. இளவரசி என்னை மறந்துவிட்டு வேறு நல்ல குலத்தைச் சேர்ந்த ராஜகுமாரனை மணந்து கொள்ளட்டும். இது என்னுடைய விருப்பம், வேண்டுகோள் என்று சொல்லுங்கள்!......" என்றார்.



—சந்திரா—

அப்போது சோலைமலை மன்னர் நடுவில் குறுக்கிட்டு, "தம்பி! என்ன வார்த்தை சொல்லுகிறாய்? என் குமாரியை யார் என்று நினைத்தாய்? உன்னை எண்ணிய மனத்தினால் இன்னொருவனை எண்ணுவாளா? ஒரு நாளும் மாட்டாள். இந்தப் படுபாவி உன்னை விடாமற் போனால், என் மகளும் பிழைத்திருக்க மாட்டாள். உங்கள் இருவரையும் பறிகொடுத்து விட்டு நான் ஒருவன் மட்டும் சோலைமலைக் கோட்டையில் பேய் பிசாசைப் போல் அலைந்து திரிந்து கொண்டிருக்க நேரிடும். ஆனால், ஒன்று சொல்கிறேன் கேள். சோலைமலை முருகன் அருளால் அப்படியொன்றும் நேராது. நீ தைரியமாயிரு!" என்றார்.

"ஆகட்டும், மாமா! நான் தைரியமாகவே யிருக்கிறேன். தாங்களும் மனதைத் தளரவிடாமல் இருங்கள். இளவரசிக்கும் தைரியம் சொல்லுங்கள்!" என்றார் மாறனேந்தல் உலகநாதத் தேவர்.

* * *

மறுநாள் உலகநாதத் தேவருக்குச் சாப்பாடு கொண்டு வந்த ஆள், துரை கவனியாத சமயம் பார்த்து ஒரு இரகசியச்

செய்தி கூறினான். சோலைமலை மகாராஜா மேஜர் துரையிடம் கூடிய வரையில் மன்றாடிப் பார்க்கப் போவதாகவும், அப்படியும் துரை மனம் மாறாவிட்டால், தூக்குப் போடும் சமயத்தில் உலகநாதத் தேவரை விடுவிக்க வேண்டிய வீரர்களைத் தயார்ப்படுத்தி வைத்திருப்பதாகவும், அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தேவரும் தயாரா யிருக்கவேண்டும் என்றும் தெரிவித்தான்.

துரையிடம் மன்றாடுவது என்பது மாறனேந்தலுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இரண்டாவது சொன்ன விஷயம் ரொம்பப் பிடித்திருந்தது. எனவே, அது முதல் அவர் மிக்க உற்சாகமாகவே இருந்தார்.

சுருக்குக் கயிறுகள் வரிசையாகத் தொங்கிய இலுப்ப மரத்தின் கிளைக்கு அடியில் நின்றபோதுகூட உலகநாதத் தேவரின் உற்சாகம் குன்றவில்லை. சோலைமலை அரசர் மேஜர் துரையிடம் மன்றாடிக் கொண்டிருந்தது மட்டும் அவருக்கு எரிச்சலை அளித்தது. எப்போது அவர்களுடைய பேச்சு முடியும், எப்போது துரை தூக்குப் போட உத்தரவு கொடுப்பான், எப்போது சோலைமலை மகாராஜா மறைவான இடத்தில் தயாராக வைத்திருந்த வீரர்கள் தடதடவென்று ஓடி வருவார்கள் என்று அவர் பரபரப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால், அவருடைய எண்ணமும், சோலைமலை மகாராஜாவின் முன் ஏற்



பாடும், ஒன்றும் நிறைவேறாத வண்ணம் விதி குறுக்கிட்டது.

உலகநாதத் தேவர் சிறைப்பட்ட செய்தி கேட்டதிலிருந்து சோகத்தில் ஆழ்ந்து படுத்த படுக்கையிலிருந்து எழுந்திராமலிருந்த மாணிக்கவல்லி, சரியாக அந்தச் சமயம் பார்த்து அரண்மனை மேல்மச்சில் ஏறி உப்பரிகையின் முகப்புக்கு வந்தாள்.

கோட்டை வாசலுக்குச் சமீபத்தில் இலுப்ப மரத்தின் அடியில் தொங்கிய சுருக்குக் கயிற்றின் கீழே தன் காதலர் நிற்பதைப் பார்த்தாள். 'ஓ' என்று அலறிக் கொண்டு கீழே விழுந்தாள்.

* * *

உலகம் சுழன்றது! தினம் ஒரு தடவை சுழன்று, வருஷத்தில் 365 தடவை சுழன்று, இந்த மாதிரி நூறு வருஷ காலம் தன்னைத்தானே சுழன்று தீர்த்தது!

நூறு வருஷத்துக்குப் பிறகு, பிரிட்டிஷ் ஆட்சி நிலை பெற்றிருந்த இந்தியாவில், இருளடைந்த ஒரு ஜில்லா சிறைச்சாலையின் அறையில் குமாரலிங்கம் தனியாக அடைக்கப்பட்டிருந்தபோது மேற்கூறிய சம்பவங்கள் எல்லாம் அடிக்கடி அவன் நினைவுக்கு வந்தன. நினைவுக்கு வந்ததோடு இல்லை; அந்த அநுபவங்களையெல்லாம் அவன் திரும்பத் திரும்ப அநுபவித்துக் கொண்டிருந்தான். இருபதாம் நூற்றாண்டில் கலாசாலையில் ஆங்கிலக் கல்வியும் விஞ்ஞான சாஸ்திரமும் கற்றுத் தேர்ந்த அறிவாளியான அவன் பலமுறையும், 'இதெல்லாம் வீண் பிரமை; ஆதாரமற்ற மனப் பிராந்தி' என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு பார்த்தான். ஆயினும் அந்தப் பிரமை நீங்குவதாக இல்லை.

குமாரலிங்கம் சிறைப்பட்டுக் கீழ்க் கோர்ட்டில் விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, வழக்கு நடத்தும் விஷயத்தில் சிறிதும் சிரத்தையேயில்லாமல் இருந்தான். அவனுக்காக இலவசமாக வந்து வழக்காடிய வக்கீல் அவனுடைய அசிரத்தையைப் பற்றி அடிக்கடி கடிந்து கொண்டார். "வழக்கில் நாம் ஜயிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் நீ இப்படி ஏனோதானோ என்று இருந்தால் கேஸ் உருப்படாது. தூக்கு மரத்தில் நீ தொங்கியே தீரவேண்டும்" என்று சொல்லிக் கண்டிப்பார். "உன் விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளக் கூடிய உற்றார் உறவினர் யாரும் இல்லையா?" என்று கேட்பார். அவர் கணக் கொண்டு குமாரலிங்கத்துக்கு ஊக்க மளித்து உற்சாகப் படுத்தலாம் என்றுதான்! ஆனால் குமாரலிங்கமோ தனக்கு உற்றார் உறவினர் யாருமே இல்லையென்றும், தன் விஷயத்தில் சிரத்தை யுள்ளவர்களே இல்லை என்றும் சாதித்து வந்தான்.

ஒரு நாள் வக்கீல் வந்து, "என்னடா, அப்பா? உனக்கு ஒருவருமே உறவில்லை என்று சாதித்து விட்டாயே? சோலைமலை மணியக்காரர் உனக்கு மாமாவாமே?" என்றார்.

"இந்தப் பொய்யை உங்களுக்கு யார் சொன்னது?" என்று குமாரலிங்கம் ஆத்திரத்துடன் கேட்டான்.

"சாக்ஷாத் சோலைமலை மணியக்காரரேதான் சொன்னார். அதோடு இல்லை! உன்னுடைய கேஸை நடத்துவதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கத் தயார் என்றும் சொன்னார்."

இதைக் கேட்டதும் குமாரலிங்கத்தின் மனோ நிலைமையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அப்போதைக்கு உயிரில் ஆசையும், வாழ்க்கையில் உற்சாகமுமே ஏற்பட்டு விட்டது. பொன்னம்மாளின் நிலைமையைப்பற்றி மணியக்காரரிடம் விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை அளவில்லாமல் உண்டாயிற்று.

எனவே, வக்கீலிடம், "நான் சொன்னது தவறுதான், ஐயா! ஆனால் சோலைமலை மணியக்காரர் என் விஷயத்தில் இவ்வளவு சிரத்தை கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தயவு செய்து அடுத்த தடவை தாங்கள் வரும்போது மணியக்காரரையும் அழைத்து வாருங்கள். அவருக்கு நான் நன்றி செலுத்த வேண்டும்!" என்றான் குமாரலிங்கம்.

வக்கீலும் அதையேதான் விரும்பினார். ஆதலால் உடனே "சரி!" என்று சொல்லி விட்டுப் போனார்.

• • •

ஒரு நாள் வக்கீல் தம்முடைய வாக்கை நிறைவேற்றினார். சோலைமலை மணியக்காரரை அழைத்துக் கொண்டு வந்தார். முன்னே பாழடைந்த கோட்டையில் வேட்டை நாய் பின் தொடரச் சென்ற மணியக்காரருக்கும் இப்போது குமாரலிங்கத்தை பார்க்க வந்தவருக்கும் வேற்றுமை நிரம்ப இருந்தது. கொலைக் குற்றவாளிகளுக் கென்று ஏற்பட்ட கடும் சிறையின் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் குமாரலிங்கத்தைக் கண்டதும் மணியக்காரரின் கண்களில் கண்ணீர் ததும்பியது. பேச முடியாமல் தொண்டையை அடைத்துக் கொண்டது. அவருடைய நிலையைப் பார்த்த குமாரலிங்கம் தானே பேச்சைத் தொடங்கினான்.

"ஐயா! என்னுடைய வழக்கு விஷயத்தில் தாங்கள் ரொம்பவும் சிரத்தை எடுத்துக் கொண்டிருப்பதாக வக்கீல் ஸார் சொன்னார். அதற்காக மிக்க வந்தனம்!" என்றான்.

"ஆமாம், தம்பி! என் வீட்டுத் திண்ணையிலே அல்லவா உன்னைக் கைது செய்து விட்டார்கள்? அதனால் எனக்கு ஏற்பட்ட வருத்தத்தையும் அவமானத்தையும் சொல்லி முடியாது!" என்றார் மணியக்காரர்.

"அச் சமயம் அங்கே தாங்கள் இருந்தீர்களா? தங்களை நான் பார்க்கவில்லையே?" என்றான் குமாரலிங்கம்.

"எப்படிப் பார்த்திருக்க முடியும்? உன்னை நான் தேடிக் கொண்டு அந்தப் பாழாய்ப்போன கோட்டைக்குப் போனேன். அதற்குள் நீ அவசரப்பட்டுக் கொண்டு வேறு வழியாக ஊருக்குள் வந்து விட்டாய்! எல்லாம் விதியின் கொடுமைதான்!" என்றார் மணியக்காரர்.

"என்னைத் தேடிக் கொண்டு போனீர்களா? எதற்காக?" என்று அடங்காத அதிசயத்தோடும் ஆவலோடும் குமாரலிங்கம் கேட்டான்.

பிறகு மணியக்காரர் எல்லாம் விவரமாகச் சொன்னார். தளவாய்ப் பட்டணத்தில் குமாரலிங்கம் பிரசங்கம் செய்தபோது மணியக்காரர் தம்முடைய முரட்டு சுபாவங் காரணமாக இரைச்சல் போட்டுப் பேசிக் கலகம் உண்டாக்கினாரென்றாலும், உண்மையில் அவன்மேல் அப்போதே அவருக்கு மரியாதையும் அபிமானமும் உண்டாகி விட்டன. சோலைமலைக்கு அவர் வந்த பிறகு தன் மகள் அவனுக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்து விட்டு வருவது பற்றிச் சீக்கிரத்திலேயே தெரிந்து கொண்டார். தெரிந்தும் தெரியாததுபோல் இருந்தார். போலீஸார் காந்தி குல்லா வேஷம் தரித்து அவனைப் பிடிக்கவந்த போது, அவர் ஏமாந்து விடவில்லை. சோலைமலை மகாராஜா மேஜர் துரையின் பேச்சைக் கேட்டு ஏமாந்த பிறகு நூறு வருஷம் இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி நடந்திருக்கிற தல்லவா? பிரிட்டிஷாரின் தந்திர மந்திரங்களையும் சூழ்ச்சித் திறன்களையும் இந்திய மக்கள் எல்லாருமே தெரிந்து கொண்டிருந்தார்கள் அல்லவா? அவ்விதமே மணியக்காரரும் தெரிந்து கொண்டிருந்தார். எனவே, அந்த வேஷக்காரர்களின் பேச்சை அவர் நம்புவதுபோல் பாசாங்கு செய்தாரே தவிர, உண்மையில் அவர்களை நம்பவில்லை. அந்த வேஷம் தரித்த போலீஸ்காரர்கள், குமாரலிங்கத்தைப் பிடிப்பதற்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் ஊகித்துத் தெரிந்து கொண்டார். எனவே, அவர்களுக்கு வெகு தடபுடலாக விருந்து கொடுப்பதற்கு வீட்டுக்குள் சத்தம் போட்டுப் பேசி ஏற்பாடு செய்தார். அவ்விதம் பேசி அவர்களை ஏமாற்றிவிட்டுப் பாழடைந்த கோட்டைக்குப் போய்க் குமாரலிங்கத்தைத் தேடிப் பிடித்து அவனுக்கு எச்சரிக்கை செய்யப் புறப்பட்டார். துரதிர்ஷ்டவசமாக அவர் போய்ச் சேர்வதற்கு முன்னாலேயே பொன்னம்மாள் போய் விட்டாள். குமாரலிங்கம் தானாகவே வந்து அகப்பட்டுக் கொண்டான்.

இதையெல்லாம் கேட்டபோது குமாரலிங்கத்துக்கு வருத்தத்தோடு கூட உற்சாகமும் கலந்து ஏற்பட்டது. பொன்னம்மாளின் தந்தை தன் விஷ

யத்தில் இப்படிப்பட்ட மன மாறுதல் அடைந்ததை நினைத்து அவன் உற்சாக மடைந்தான். பொன்னம்மாள் அவ்வளவு அவசரப் படாதிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் என்று வருந்தினான். "பொன்னம்மாள் பேரில் என்ன பிசகு? அவள் சொன்னதை உடனே நம்பி அவசரப் பட்டு ஓடிய என்பேரில் அல்லவா பிசகு? ஒரு கிராம மணியக்காரருக்கு உள்ள புத்திக் கூர்மை காலேஜுப் படிப்புப் படித்த எனக்கு இல்லையே?" என்று எண்ணித் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

மணியக்காரர் சொன்னதை யெல்லாம் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த பிறகு, தான் ஆரம்பத்திலிருந்தே கேட்பதற்கு விரும்பித் துடி துடித்துக் கொண்டிருந்த கேள்வியை அவன் கேட்டான்.

"ஐயா? பொன்னம்மாள் எப்படியிருக்கிறாள்? சௌக்கியமா யிருக்கிறாளா?" என்றான்.

"இது என்ன கேள்வி? என்னமாக சௌக்கியமா யிருப்பாள்? உன்னைப் போலீஸார் கைது செய்து கொண்டு வந்ததிலிருந்து அவளுக்கு அசௌக்யந் தான்!" என்றார் மணியக்காரர்.

"அசௌக்யம் என்றால் உடம்புக்கு என்ன செய்கிறது? வைத்தியம் ஏதாவது பார்த்தீர்களா?" என்று குமாரலிங்கம் கவலையோடு கேட்டான்.

"என்ன வைத்தியம் பார்த்து என்ன பிரயோஜனம்? வைத்தியத்தினாலும் மருந்தினாலும் தீருகிற வியாதியில்லை. மனக் கவலைக்கு மருந்து ஏது? அவளாலேதான் நீ போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டாய் என்ற எண்ணம் பொன்னம்மாள் மனதில் ஏற்பட்டு விட்டது. அதனால் அவள் மனதில் ஏற்பட்ட கவலை உடம்பையும் படுத்துகிறது."

இதைக் கேட்ட குமாரலிங்கத்தின் நெஞ்சு பிளந்து விடும் போலிருந்தது.

"ஐயா! தாங்கள் பொன்னம்மாளுக்கு ஆறுதல் சொல்லக் கூடாதா?" என்று குமாரலிங்கம் கூறிய வார்த்தைகளில் துயரம் ததும்பி யிருந்தது.

"நான் என்ன ஆறுதல் சொல்ல முடியும்? சொன்னால்தான் என்ன உபயோகம்? நீ வந்து ஆறுதல் சொன்னால்தான் உண்டு! ஆனால் நீ ரொம்ப அசிரத்தையா யிருக்கிறாய் என்று வக்கீல் ஐயா சொல்கிறார். அசிரத்தை கூடவே கூடாது, அப்பனே! உனக்காக இல்லா விட்டாலும், பொன்னம்மாளுக்காகச் சிரத்தை எடுத்துக் கேஸை நடத்த வேண்டும். வக்கீல் ஐயா சொல்கிறபடி செய்து எப்படியாவது விடுதலை அடைய வேண்டும்!" என்றார் மணியக்காரர்.

கதைகளிலே சொல்வதுபோல், அப்போது குமாரலிங்கத்தின் முகத்தில் ஒரு சோகப் புன்னகை தவழ்ந்தது. மனதிற்குள்ளே அவன் "விடுதலை அடைவதா? இந்த உடம்பிலிருந்து உயிர் போகும் போதுதான் எனக்கு விடுதலை! ஆனால் இதை இவர்களிடம் சொல்லி என்ன பயன்? வீணாக வருத்தப் படுவார்கள்!" என்று எண்ணிக் கொண்டான்.

"ஆகட்டும், ஐயா! என்னால் முடிந்த வரையில் சிரத்தை எடுத்துக் கொள்கிறேன். ஆனால் பொன்னம்மாளுக்குத் தாங்கள் தைரியம் சொல்லுங்கள். என்னை அடியோடு மறந்து விடச் சொல்லுங்கள். நல்ல அந்தஸ்திலுள்ள வாலிபன் யாருக்காவது அவளைச் சீக்கிரம் கலியாணம் செய்து கொடுங்கள்!" என்று பரிவோடு குமாரலிங்கம் சொன்னான்.

இப்படிச் சொல்லி முடித்ததும், மாறனேந்தல் உலகநாதத் தேவர் சோலைமலை அரசருக்குச் சொன்ன வார்த்தைகளையே தானும் ஏறக்குறைய இப்போது சொன்னதை எண்ணித் திடுக்கிட்டான்.

அதற்கு மணியக்காரர் கூறிய பதில் மேலும் அவனைத் திடுக்கிடச் செய்தது. சோகமும் பரிகாசமும் கலந்த தொனியில் மணியக்காரர் சிரித்து விட்டு, "குமாரலிங்கம்! பொன்னம்மாளை யார் என்று நினைத்தாய்? உன்னை எண்ணிய மனதினால் இன்னொருவனை எண்ணுவாளா?" என்றார்.

(அடுத்த இதழில் முடியும்)

உங்களுக்கு ஆஸ்பிரின் தேவையான சமயத்தில்

Alasil

TABLET

Aspirin with a Difference



சாப்பிட்டு வித்தியாசத்தைக் கவனியுங்கள்!


"அலாஸில்" வில்லைகளை பரீக்ஷித்துப் பார்த்தவர்கள் எளிதில் சகல வலியையும் போக்கும் அருமையான குண விசேஷங்களுக்காக அவைகளை மிகவும் பாராட்டுகிறார்கள். "அலாஸில்" வில்லைகளில் மிகவும் சுத்தமான ஆஸ்பிரீன் அதிக சக்தியுள்ள புளிப்பு மாற்றும் வயிற்று உபசமனகாரியுமான "அலகால்" உடன் சேர்ந்து இருப்பதால் அவைகள் முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. இக்காரணத்தினால் ஒவ்வொருவரும் மென்மையான ஜீர்ண அங்கக்கட்டு உள்ளவர்களும்கூட "அலாஸில்" வில்லைகளை சாப்பிடலாம் அவைகள் கீழ்கண்ட ஐந்துவித விசேஷமான அம்சங்களை உடையவைகளாயிருக்கின்றன.

1. வலியிலிருந்து சீக்கிரமாக விடுதலையைக் கொடுக்கின்றன
2. ஜீர்ணத்துக்கு உதவியாயிருப்பதுடன் வயிற்றைத் தேற்றுகின்றன.
3. அதிகமாயுள்ள புளிப்பை அகற்றுகின்றன.
4. பின்னால் கெடுதலோ அல்லது அதிருப்தியோ கொடுக்கக்கூடியவைகளாயில்லை
5. பழக்கம் ஏற்பட்டுவிடக்கூடியவைகளாயில்லை

அவைகளின் அருமையான குண விசேஷங்களிலும் "அலாஸில்" வில்லைகள்—அதிக அநுகூலங்கள் உள்ள பெரிய வில்லைகள்—அநேக வருஷங்களாக வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டு குறிக்கப்பட்டு வருகின்றன.

புதிய அபிவிருத்தி செய்யப்பட்ட மாதிரியான ஆஸ்பிரீன்.

இவைகளுக்கு "அலாஸில்" சாப்பிடுங்கள் தலைவலி ஜலதோஷம், பல்வலி, நரம்பு வலி, வாதவலி, இடுப்புவலி, இடுப்புச்சந்துவாதம் விட்டுவிட்டு வரும் சகல வலிகள், தூக்கமின்மை புளிப்பினால் ஏற்படும் ஜீரணக் கோளாறுகள்.



எல்லா மருந்து வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:
செராம்ப்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
தபால் பெட்டி நெ. 1205, மதராஸ்
மேலும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும் உண்டு



ஏமாந்த நரி

கோபால்

ஒரு நரி ஒரு தேனீயைப் பிடித்து ஒரு கோணிப்பையில் கட்டி வைத்தது. அந்தப் பையை ஒரு தோசைக் காரியிடம் கொடுத்து, "இதைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுப் போயிற்று.

தோசைக்காரி கோணியைத் திறந்து பார்த்தாள். தேனீ பறந்து போயிற்று. நரி திரும்பி வந்து கோணிப் பையைக் கேட்டது. தேனீயைக் காணோம். "என் தேனீ எங்கே? அதற்குப் பதிலாக உன் கோழியைத் தா!" என்றது.

நரி கோழியைக் கோணிப் பையிலே கட்டிக் கொண்டு போயிற்று. ஒரு இடையன் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தான். நரி அவனிடம் கோணியைக் கொடுத்து, "இதைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போயிற்று.

இடையன் கோணியைத் திறந்து பார்த்தான். கோழி ஓடிப் போயிற்று. நரி திரும்பி வந்து, "என் கோழிக்குப் பதிலாக உன் ஆட்டைத் தா!" என்று கேட்டது.

நரி ஆட்டைக் கோணியிலே கட்டிக் கொண்டு போயிற்று. ஒரு வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டிற்று. வீட்டுக்காரி கதவைத் திறந்தாள். நரி அவளிடம் கோணியைக் கொடுத்து, "இதைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். பத்து நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுப் போயிற்று.

வீட்டுக்காரி கோணியைத் திறந்து பார்த்தாள். ஆடு ஓடிப் போயிற்று. நரி திரும்பி வந்து, "என் ஆடு எங்கே? என் ஆட்டுக்குப் பதிலாக உன் பிள்ளையைத் தா!" என்று சொல்லிற்று.

நரி வீட்டுக்காரியின் மகனைக் கோணியில் கட்டிக் கொண்டு போயிற்று. ஒரு பெண் வீடு பெருக்கிக் கொண்டிருந்தாள். நரி அவளிடம் கோணியைக் கொடுத்து, "இதைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போயிற்று.

நரி போனதும், கோணிக்குள்ளே இருந்த பையன் அழுதான். உடனே அந்தப் பெண் கோணியைத் திறந்து, பையனை வெளியே விட்டாள். பையன் அவளிடம் நரி செய்த மோசத்தைப் பற்றிச் சொன்னான். அவள் உடனே பையனைத் தன் வீட்டுக்குள் மறைத்து வைத்தாள். பிறகு, அவள் தன் நாயைப் பிடித்துக் கோணிக்குள்ளே போட்டுக் கட்டி வைத்தாள்.

நரி திரும்பி வந்தது. கோணிப் பையை வாங்கித் தோளின்மேல் போட்டுக் கொண்டு தன் வீட்டுக்குப் போயிற்று. "பையனை அனுப்பி, வேண்டிய போதெல்லாம் கோழிகள் திருடிக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லலாம்" என்று அது சந்தோஷப்பட்டது. சற்று தூரம் போன பின் அது கோணியை அவிழ்த்தது. நாயைப் பார்த்துத் திகைத்தது. நாய் "லொள், லொள்!" என்றது. நரி பயந்து போய் ஒரே ஓட்டமாய் ஓடி ஒளிந்து கொண்டது.



நாய் தன் வீடு போய்ச் சேர்ந்தது; பையன் தன் தாயாரிடம் சென்றான்; தேனீ பறந்து தன் கூட்டுக்குச் சென்றது; கோழியும் தன் கூட்டை அடைந்தது; ஆடு மந்தையோடு மந்தையாகப் பழையபடி சேர்ந்து கொண்டது.

சந்திர

ஆசிரியர்: பிரேம் சந்த்



— முதல் அத்தியாயம் —

வளையல் வியாபாரி

மழை காலம், ஐப்பசி மாதம். வான வெளியை வெண் முகில்கள் மறைத்திருந்தன. இடை இடையே லேசாகத் தூற்றல் வேறு போட்டுக் கொண்டிருந்தது. மாலை சுமார் நாலு மணி இருக்கும். ஆனால் வானத்தைப் பார்த்தால் அஸ்தமனம் ஆகியிருக்குமோ என்று சந்தேகமாக இருந்தது. மாந்தோப்பில் பெரிய பெரிய மரக்கிளைகளில் ஊஞ்சல்கள் தொங்கிக் கொண்டிருந்தன. சில பெண்களும் அவர்களுடைய தாய்மார்களும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தனர். சிலர் ஊஞ்சலை வீசி வீசி ஆட்டிக் கொண்டிருந்தனர். ஒருத்தி ஊஞ்சல் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள். இன்னொருத்தி தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள். எவ்விதக் கவலையும் இன்றி அவர்களுடைய பொழுது போய்க் கொண்டிருந்தது. மழைத் துளிகள் அவர்களுடைய மனக் கவலையைப் போக்கி, அவர்களைப் பால்ய நினைவுகளில்

ஹாரம்



மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

லயிக்கச் செய்தன. அவர்களுடைய வாடிப் போன மனப் பூங்காவில் பசுமை தளிர ஆரம்பித்தது. பொன்னிற நெற் பயிர்கள் இயற்கையின் பசுமையை இன்னும் அழகு படுத்திக் கொண்டிருந்தன.

இதே சமயம் ஒரு வியாபாரி தன் பெட்டியுடன் அவர்கள் ஊஞ்சலாடும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும், எல்லாரும் ஊஞ்சல் ஆடுவதை நிறுத்தி விட்டு, ஓடிப்போய் அவனைச் சூழ்ந்து கொண்டனர். வியாபாரி தன் பெட்டியைத் திறந்து, 'பளபள' வென்று கண்களைப் பறிக்கும் போலி முத்துக்களாலான மாலைகள், கண்ணாடி வளையல்கள், ஜிமிக்கிகள், அழகு அழகான பொம்மைகள், பொம்மைகளுக்கான நகைகள், பம்பரங்கள், கிலு கிலுப்பைகள் முதலியவற்றை எடுத்து வெளியில் வைத்தான். அவரவர்கள் தங்கள் தங்களுக்குப் பிடித்தவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டனர். அகன்ற நீண்ட விழிகளையுடைய பெண் ஒருத்தி, 'பளபள' வென்று 'டால்' வீசும் போலிச் 'சந்திர ஹாரம்' ஒன்றைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு,

"அம்மா, எனக்கு இதை வாங்கித் தருகிறாயா?" என்று கேட்டாள்.

தாயார் வளையற்காரனைப் பார்த்து "இது என்ன விலை, அப்பா?" என்று கேட்டாள்.

வியாபாரி தன் கைக் குட்டையினால், ஹாரத்தைத் துடைத்த வண்ணம், "ஒன்றேகால் ரூபாய்க்கு நான் வாங்கினேனுங்க. நீங்கள் கொடுக்கிறதை நான் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றான்.

"ரொம்ப விலை அதிகமாகச் சொல்லுகிறாயே! அது நாலு நாளிலே கறுத்துப் போய் விடுமே, அப்பா!" என்றாள் தாயார்.

வியாபாரி வெகு சாதுரியமாகத் தலையசைத்துக் கொண்டு, "அம்மா, உங்கள்



சந்திர ஹாரம் என்பது கல்யாண காலத்தில் பிள்ளை வீட்டார்கள் பொதுவாக மணப் பெண்ணுக்கு வழங்கும் பரிசு.

குழந்தைக்குத்தான் நாலு நாளிலே வைரச் 'சந்திர ஹாரமே' கிடைத்து விடுமே!" என்றான்.

தாயாரின் உள்ளத்துக்கு வியாபாரியின் அந்த இனிமையான சொல் மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. அந்த ஹாரத்தை விலைக்கு வாங்கிக் கொண்டு விட்டாள்.

பெண்ணின் ஆனந்தத்துக்கு கங்கு கரையில்லை. வைர ஹாரம் கிடைத்தால் கூட அவளுக்கு இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டிராது என்றே தோன்றிற்று. அந்த ஹாரத்தைப் போட்டுக் கொண்டு ஊர் பூராவும் வலம் வந்தாள். கண்டவர்களிடத்தில் எல்லாம் வெகு பெருமையுடன் அதைக் காட்டி மகிழ்ந்தாள். அவளுடைய குழந்தை யுள்ளத்துக்கு இதைவிட விலையுயர்ந்த பொருள் உலகத்திலேயே இல்லை எனப் பட்டது.

அந்தப் பெண்ணின் பெயர் பத்மா. அவளுடைய தாயாரின் பெயர் மானஸி.

— இரண்டாம் அத்தியாயம் —

அந்த நன்னாள்

தீனதயாள் பாபு அலகாபாத் ஜில்லாவில் உள்ள ஒரு சின்னஞ் சிறு கிராமத்தில் வசித்து வந்தார். அவர் அவ்வூர் ஜமீன்தாரிடம் கணக்குப் பிள்ளையாக வேலைபார்த்து வந்தார். பெரிய இடத்தில் வேலை பார்த்து வந்ததனாலும், எந்த வேலைகளையும் தாம் ஏற்றுக் கொண்டு செய்து வந்ததனாலும், அவருக்குத்தான் அந்த ஊரிலேயே செல்வாக்கு அதிகமாயிருந்தது. அவர் ஏவின காரியங்களைச் செய்ய நாலு வேலைக்காரர்கள் எப்பொழுதுமே தயாராயிருந்தனர். ஆனால் அவருக்கோ சம்பளம் ஐந்தே ஐந்து ரூபாய்தான். இந்த ஐந்து ரூபாயில் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்த அவரால் எப்படி முடிந்தது என்பது யாருக்குமே விளங்காத விஷயம்.

அவருடைய பெண்தான் பத்மா. அவளுக்குக் கூடப் பிறந்தவர் மூன்று பேர். ஆனால் இப்பொழுது அவள் மட்டும்தான் அந்த வீட்டுக்குக் குழந்தை. அவளிடம் யாராவது போய், "உன் தமயன்மார் எங்கே?" என்று கேட்டால், "ரொம்ப தூரத்துக்கு விளையாடப் போயிருக்கிறார்களாம்" என்று சட்டெனப் பதில் சொல்லி விடுவாள். கணக்குப் பிள்ளை ஒரு தடவை ஒரு ஏழையை 'அடி அடி' யென்று அடித்து விட்டாராம். அவர் அடித்த அடியில் அவன் சுருண்டு விழுந்து செத்து விட்டானாம். அவன் செத்த மூன்று வருஷத்துக்குள் அவருடைய மூன்று பிள்ளைகளும் செத்து விட்டார்களாம். அதனால் அவர் அதுமுதல் எதற்குமே பயந்து நடக்க ஆரம்பித்து விட்டார். சூடு கண்ட பூனையைப் போல அவர் எதற்குமே வெகு ஜாக்கிரதையாக இருந்து வந்தார். சோகம் கலந்த அவர் வாழ்க்கையைக் குழந்தை பத்மாதான் இன்ப மயமாகச் செய்து வந்தாள்.

தீனதயாள் பாபு அலகாபாத் போய் வரும் பொழுதெல்லாம் குழந்தை பத்மாவுக்காக ஏதாவது ஒரு நகை வாங்கிவரத் தவற மாட்டார். குழந்தைகளுக்குப் பொம்மைகளையும் விளையாட்டுச் சாமான்களையும் வாங்கிக் கொடுப்பதனால் காசுதான் நசியாகும் என்பது அவருடைய எண்ணம். ஆகையால் அவர் நகைகளைத் தவிர வேறொன்றுமே குழந்தைக்கு வாங்கி வருவதில்லை. குழந்தை பத்மா நகைகளைக் கொண்டேதான் விளையாடுவாள். அவளுக்கு நகைகள்தான் விளையாட்டுச் சாமான்களாக இருந்தன. அன்று வியாபாரியிடம் வாங்கிய அந்தப் போலிச் சந்திரஹாரம்தான் அவளுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டுச் சாமானாக இருந்தது. அவளுடைய குழந்தை யுள்ளத்தில், உண்மையான சந்திரஹாரத்தைப் பற்றிய நினைவே எழவில்லை. கிராமத்தில் ஏதாவது திருவிழா நடந்தாலும் சரி, ஏதாவது விசேஷம் நடந்தாலும் சரி, அவள் அந்த ஹாரத்தைத்தான் அணிந்து கொள்வாள். அவளுக்கு அந்த ஹாரத்தைத் தவிர வேறு நகையே பிடிப்பதில்லை.

ஒரு நாள் தீனதயாள் பாபு, எங்கேயோ போய் விட்டு வந்த பொழுது, மானஸிக்காக ஒரு வைரச் சந்திரஹாரம் வாங்கிக் கொண்டுவந்தார். அதை அணிந்துகொள்ள வேண்டும் என்ற அவளுடைய வெகு நாளைய ஆசை அன்றுதான் பூர்த்தி யடைந்தது.

அந்த ஹாரத்தைப் பார்த்த பிறகு, பத்மாவுக்குத் தன்னுடைய ஹாரம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. உடனே தந்தையிடம் ஓடி, "அப்பா, அப்பா, அம்மாவுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறாயே, அது மாதிரி மாலை எனக்கும் வாங்கித் தருகிறாயா?" என்று வெகு ஆவலுடன் கேட்டாள்.

தீனதயாள் பாபு புன்முறுவலுடன், "வாங்கித் தருகிறேன், கண்ணே!" என்றார்.

"எப்பொழுது அப்பா வாங்கித் தருவாய்?"

"இன்னும் கொஞ்ச நாளில் வாங்கித் தருகிறேன், அம்மா!"

தந்தையின் இந்தப் பதில் பத்மாவுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. உடனே அவள் தாயாரிடம் ஓடினாள். "அம்மா, உனக்கு வாங்கியிருக்கிற மாதிரி எனக்கும் ஒரு மாலை அப்பாவை வாங்கித்தரச் சொல்லு, அம்மா" என்று குழந்தைப் பிடிவாதத்துடன் சொன்னாள்.

"அதற்கு நிறையக் காசு வேணுமே, அம்மா" என்று பதில் அளித்தாள் தாயார்.

"நீ மட்டும் உனக்காக வாங்கிக் கொண்டாயே? எனக்கு மட்டும் வாங்கித் தரக் கூடாதோ?"

தாயார் சிரித்துக் கொண்டே, "உனக்கு இது மாதிரி உன் புக்ககத்திலே வாங்கிப் போடுவார்கள்" என்றாள்.

தாயாரின் பதிலைக் கேட்ட பத்மா வெட்கத்துடன் ஓடிவிட்டாள். ஆனால் தாயாரின் அந்தச் சொல் அவளுடைய உள்ளத்தில் பதிந்து விட்டது. புக்ககம் என்பது பயங்கரமான மிருகங்கள் இருக்கும் காடாக அவளுக்குப் படவில்லை. 'புக்ககத்தில் சந்திரஹாரம் வாங்கித் தருவார்கள் என்றால் அவர்கள் நம் அப்பா அம்மாவைக் காட்டிலும் நம்மிடம் அதிகப் பிரியமாகத் தானே இருப்பார்கள்! இல்லாவிட்டால், நம் அப்பா அம்மாவினால் வாங்கிக் கொடுக்க முடியாத சந்திரஹாரத்தை அவர்கள் வாங்கித் தருவார்களா?' என்றது அவளுடைய மனம்.

அவளுக்குத் தெரிந்து மூன்று பெண்களுக்குக் கல்யாணம் ஆகியிருக்கிறது. அவர்களுடைய புக்ககத்தில் எல்லாம், அந்தப் பெண்களுக்கு யாருமே சந்திரஹாரம் வாங்கிப் போடவில்லையே! அது மாதிரி பத்மாவுக்குத் தன்னுடைய புக்ககத்திலும் வாங்கிப் போடாமல் இருந்து விட்டால்?......"போடாமல் இருந்து விட்டால், அம்மா தன் சந்திரஹாரத்தை யாவது எனக்குக் கொடுத்து விட மாட்டாளா?...... கட்டாயம் கொடுப்பாள்" என்று அவள் தன் மனத்துள் எண்ணிக் கொண்டாள்.

இதே மாதிரி ஆனந்தமாக அவளுடைய ஏழு வருஷ வாழ்க்கை ஓடிவிட்டது. வெகு நாட்களாக, அவளுடைய உள்ளத்தில் குடி கொண்டிருந்த ஆசை பூர்த்தியடையும் அந்த நன்னாளும் நெருங்கிக் கொண்டிருந்தது.

— மூன்றாம் அத்தியாயம் —

வரன் கிடைத்தது

தீனதயாள் பாபுவுக்குத் தெரிந்தவர்களில் தயாநாத பாபு என்பவரும் ஒருவர். அவர் மிகவும் நல்லவர். கோர்ட்டில் வேலையில் இருந்தார். அவருக்கு மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம். தீனதயாள் பாபு அடிக்கடி ஜமீன் சம்பந்தமாகக் கோர்ட்டுக்கு வரவேண்டியிருந்தது. தயாநாத பாபு மூலம் அவருடைய அநேக காரியங்கள் சுலபமாக முடிந்திருக்கின்றன. தயாநாத பாபு நினைத்திருந்தால், அதற்காக அவரிடம் ஆயிரக் கணக்காக ரூபாய்கள் வசூலித்திருக்கலாம். ஆனால் அவர் பணம் வாங்குவது என்பதே அறியாதவர். அதற்காக அவரை மிகவும் உயர்ந்த குணம் படைத்தவர் என்றும் சொல்லி விடுவதற்கில்லை. 'லஞ்சம் வாங்குவது பாபம்' என்பது அவருடைய எண்ணம். லஞ்சம் வாங்கி அநேகர் அகப்பட்டுக்கொண்டு விழித்திருப்பதை அவர் தம் கண்களாலேயே கண்டிருக்கிறார். சிலர் ஜெயிலுக்குப் போக நேர்ந்திருக்கிறது. சிலர் குழந்தைகளில்லாமல் மனக்கஷ்டப்பட நேர்ந்திருக்கிறது. சிலர் லஞ்சம் வாங்கிப் பணத்தைக் கெட்ட வழியில் செலவழித்திருக்கின்றனர். லஞ்சம் வாங்கிச் சுகப்பட்டவன் ஒருவனைக் கூட அவர் தம் வாழ்நாளில் கண்டதே இல்லை. ஆகையால் கெட்ட வழியில் சம்பாதித்தால் பாபம் என்ற

எண்ணம் அவருடைய உள்ளத்தில் வேரூன்றி விட்டது.

இந்தக் காலத்தில் நூறு ரூபாய் சம்பளம் எந்த மூலைக்கு? ஐந்து பேரை வைத்துக் கொண்டு எப்படி ரக்ஷிக்க முடியும்? பிள்ளைகள் நல்ல துணி கட்டிக் கொள்ள ஆசைப்பட்டனர். மனைவி நகைக்கு ஆசைப் பட்டாள்; இவ்வளவு இருந்தும், தயாநாத பாபு வாழ்க்கைத் தோணியைக் கலங்காமல் நலுங்காமல் கரை சேர்க்க முயன்றார். பெரிய பையன் ரமாநாத் காலேஜில் இரண்டு மாதங்கள் படித்துவிட்டு, திடீரென நடுவிலேயே நிறுத்தி விட்டான். அதற்காகத் தகப்பனார் வருந்தவில்லை. "நீ படிப்பை நிறுத்தினதில் எனக்குப் பரம திருப்தி. அப்படிப் படிக்க வேண்டும் என்று உனக்கு ஆசை யிருந்தால் நீ தானே ஏற்பாடு செய்து கொள். என் கையை எதிர்பார்க்காதே" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.




ஆனால், ரமாநாத்துக்குப் படிப்பில் அவ்வளவு உற்சாகம் இல்லை. இரண்டு வருஷமாக ஒரு வேலையும் இல்லாமல் இருந்தான் அவன். சதுரங்கம் விளையாடுவது, சீட்டு ஆடுவது, எங்கேயாவது ஊர் சுற்றுவது, தாயாரிடத்திலும் தம்பிகளிடத்திலும் தன் அதிகாரத்தைச் செலுத்துவது, இப்படியே அவன் தன் பொழுதைப் போக்கி வந்தான். சிநேகிதர்கள் மூலம் தன் ஆசைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முயன்றான். ஒருவனுடைய சைக்கிளை வாங்கிக்கொண்டு 'காற்று வாங்கப் போகிறேன்' என்று எங்கேயாவது வெளியே சுற்றப் போய் விடுவான். இன்னொருவனுடைய கைக்கடிகாரத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு அழகு பார்த்துக் கொள்ளுவான். நண்பர்களின் சட்டை, துணி மணிகளை உபயோகப் படுத்திக் கொண்டு அன்றாடம் புதுப் புது உடைகளில் தோற்றம் அளிப்பான்.

இப்படியே பிறருடைய காசில் உண்டு வாழ்ந்து சோம்பித் திரியும் இந்த வாலிபனைத் தான் தினதயாள் பாபு தம் பெண் பத்மாவுக்கு வரனாகத் தேர்ந்தெடுத்தார். தயாநாத பாபு தம் பிள்ளைக்குக் கல்யாணமே செய்ய வேண்டாம் என்று எண்ணினார். அவருக்கு ஒரு புது ஆளைத் தம் குடும்பத்தில் சுமையாகச் சேர்த்துக் கொள்ளப் போதிய சௌகரியமும் இல்லை; துணிவும் ஏற்படவில்லை. ஆனால் அவருடைய மனைவி ஜாகேசவரி, பெண்களுக்கு இயற்கையான பிடிவாதத்தை உபயோகித்துக் காரியத்தைச் சாதிக்க முயன்றாள். அவளுடைய அந்தப் பிடிவாதத்துக்கு அவர் தலை வணங்க நேர்ந்தது. அவள் எவ்வளவோ வருஷங்களாக, 'தனக்கும் ஒரு மாட்டுப்பெண் வரமாட்டாளா?' என்று ஏங்கிக் கொண்டிருந்தாள். அவளுடன் கூடவே வாழ்க்கைப்பட்டுப் புக்ககம் போன அவளுடைய அநேக சிநேகிதிகள் பேரன் பேத்திகள் எடுத்து விட்டதைக் காணும் பொழுது தன் பிள்ளைக்கும் கல்யாணம் ஆகித் தானும் பேரன் பேத்திகளுக்குப் பாட்டி ஆகமாட்டோமா என்ற ஆவல் அவளுக்கு அதிகரிக்கத்தான் செய்தது. இவ்வளவு நாள் தன் பிள்ளைக்குக் கல்யாணம் ஆகாமல் நின்று போனதை எண்ணும் பொழுது அவளுக்கு ரொம்பவும் வருத்தமாக இருந்தது. இந்த வருத்தத்தில் ஒவ்வொரு சமயம் 'என் பிள்ளைக்குக் கூடிய சீக்கிரம் கல்யாணம் ஆகவேண்டும், பகவானே!' என்று வேண்டிக் கொள்வாள்.

இந்தச் சமயத்தில் தினதயாள் பாபு தம்முடைய பெண்ணை அவளுடைய பிள்ளைக்குக் கொடுக்க வந்தபொழுது 'குருடனுக்குக் கண்கள் கிடைத்து விட்டது' போன்ற அளவற்ற மகிழ்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. (தொடரும்)

இல்லாளாக இருப்பது விளையாட்டில்லை



வேலையாட்கள் முன்னேவிட இரட்டிப்பு சிலவாயும், காய்கறிகள் ஒன்றுக்கு மூன்று நான்குபங்கு அதிகவிலையுள்ளதாயும், பழங்கள் கிடைப்பது அரிதாயும், வண்ணான் சரிவர வராமலும் சமையல் வேலை செய்பவர்கள் சிலவை அதிகம் காட்டுவதிலேயே ஆசைகொண்டவர்களாயும் உள்ள இந்த நாட்களில் வாழ்க்கை ஒரே கவலை சித்திரமாக இருக்கின்றது. ஆயினும் இல்லாள் இவைகளை எல்லாம் ஒரு உற்சாகத்தோடு சமாளிக்க வேண்டும். அதற்கு அவளுக்கு அடிக்கடி போஷணையளிக்கும் டீ தேவையாய் இருக்கிறது. டீயைப்போல் சோர்வுற்ற நரம்புகளுக்கு பலமளித்து மனதிற்கு ஆயாசம் தீர்த்து விட்டு அலுவல்களை சரிவர கவனிப்பதற்கு வேண்டிய பலமளிப்பது வேறு ஒன்றுமில்லை.

நல்ல டீ தயாரிக்கும் முறை



1. டீயை கெட்டிலில் காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதுவெதுப்புடனும் இருந்தால் தான் உலர்ந்த டீ தழையைப் போட்டு கொதிநீரை விட்டதும் அது கஷாயமாகி நல்ல மணத்தைத் தரும்.
3. ஒவ்வொரு கப்புக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீபாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னேயே கொதிக்க வைத்த தண்ணீரையோ, கொதிக்காத தண்ணீரையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த தண்ணீரையோ உபயோகிக்காதே. நீர் குமிழைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு ஊறவைத்துக் கஷாயம் இறக்க வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும்பொழுதே சர்க்கரையும் பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றிய பிறகே அவைகளை சேர்க்கவும்.

டீ

எந்நேரமும் டீ நேரம்தான்


இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



தூரம் எவ்வளவானாலும்
ஏற்றது
டன்லப்
டயர்தான்
TRADE MARK
DK 294 TM

புகையிலோ, புகையல்!

தாபன்



துளசிபாய் இயற்கையாகவே பண ஆசை யுடையவள். செல்வத்தைப் புகழ்வதிலும் போற்றுவதிலும் மற்ற மாதர்களை விட அதிக விருப்ப முடையவள். ஒரு தனவந்தர் வீட்டுப் பெண்ணைப் பற்றி யாராவது பேசிக் கொண்டிருந்தால் துளசிபாய் புன்முறுவலுடன், "ஓ, அந்தப் பெண்ணா? அவளை எனக்கு ரொம்ப நாளைக்கு முன்பே தெரியுமே! அவள் எனக்கு நெருங்கிய பந்து அல்லவா? நானும் அவளும் உயிர் ஒன்று, உடல் இரண்டு!" என்பாள். ஆனால் ஓர் எளிய உற்றார் உறவினரைப் பற்றிப் பேச்சை எடுத்தாலோ, அவர்களைப்பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது! "உலகத்தில் எத்தனையோ பேர்! எல்லோரையும் நாம் நினைவிலா வைத்துக் கொண்டிருக்கிறோம்?" என்று அலட்சியம் செய்வாள்.

பகவான் என்னவோ துளசிபாயை எளியவளாகத்தான் படைத்து விட்டார். அவள் கணவர் அனுமந்தராயரும் ஏழை தான். முனிசிபாலிடியிலே வேலை; முப்பது ரூபாய் சம்பளம். இதை வைத்துக்கொண்டு தான் துளசி தன் குடும்பத்தை நடத்த வேண்டும். பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டுமானால் கணவரின் உத்தியோகத்தில் முதல் இரண்டு எழுத்துக்களை அழித்து விட்டு, 'கலெக்டர்' என்று சொல்லிக் கொள்ளலாம்!

துளசி மிகவும் செட்டாகக் குடித்தனம் செய்பவள். ஒவ்வொரு மாதமும் சிறிது சிறிதாக மிச்சப்படுத்திப் புது தினுசில் கழுத்துக்கு ஒரு தங்கச் சங்கிலி செய்து அணிந்து கொண்டாள். அடாடா! அந்தச் சங்கிலி படுகிற பாடு உண்டே, அதைச் சொல்லத் தரமன்று! அழுக்கு பட்டு விடக் கூடாது என்று ஸ்நானம் செய்யும்போதெல்லாம் அதைக் கழற்றிப் பெட்டியில் வைத்து விடுவாள்.

தன் சிநேகிதிகளிடம், "ஐயையோ! எப்படித்தான் இந்தக் கர்நாடகங்கள் இத்

நீளே நகைகளைச் சுமந்து கொண்டிருக்கிறதுகளோ? நான் பேசாமல் நகைகளையெல்லாம் கழற்றிப் பெட்டிக்குள்ளே வைத்து விட்டேன். 'நெக்லே'ஸையும் வைரத் தோட்டையும் மூக்குத் தளுக்கையும் எப்போதும் எப்படிப் போட்டுக் கொண்டே யிருப்பது? அந்த ஒரு சங்கிலியை அணிந்திருப்பதே மூச்சை முட்டுகிறது!......உஸ்......அப்பப்பா!" என்று மூந்தானையால் விசிறிக்கொண்டு ஆசுவாசப் படுத்திக்கொள்வாள் துளசி.

★

ஒருநாள் துளசி வீட்டு வாசலில் ஏழுமலையான் ஒருவன் நீச்சட்டியும் அங்கமெல்லாம் பட்டை நாமங்களுமாகப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வந்தான். அவனைக் கண்டதும் துளசிபாய் பக்தியுடன் வீட்டுக்குள் சென்று கை நிறைய அரிசி கொண்டு வந்து போட்டாள். ஏழுமலையான் துள்ளிக் குதித்து, "தாயே, கோவிந்தம்! தங்களுக்கு யோகம் பொங்குது! கோவிந்தம்!" என்றான்.

"கோவிந்தா, இப்படி வா! என்ன சொல்கிறாய்? — விவரமாய்ச் சொல்!— இன்னும் கொஞ்சம் சாதமும் பழைய வேஷ்டியும் தருகிறேன்!" என்றாள் துளசி.

ஏழுமலையான் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே, "தாயே! தங்கள் வீட்டிலே புதையல் இருக்கிறது. அது தங்கள் கையில் தான் கிடைக்கப்போகிறது" என்றான்.

"நிஜமாகத்தானா? பொய் சொல்லாதே, கோவிந்தா!" என்றாள்.

"நானா சொல்கிறேன்? ஏழுமலையில் எழுந்தருளி யிருப்பவன் சொல்கிறான்! இருந்தால் அவனுக்குப் பெருமை; இல்லாவிட்டால் அவனுக்குத்தானே சிறுமை?"


"கோவிந்தா! எங்கே யிருக்கிறது? எப்பொழுது கிடைக்கும்?"

"தாயே! அதைப் பூதம் காவல் காக்கிறது. நான் சொல்கிறபடி செய்தால் நீங்களே எடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஏழுமலையானுக்கு என்ன காணிக்கை...?"

"அடேயப்பா! நீ கேட்பதைத் தருகிறேன்! இல்லையென்றா சொல்வேன்!"

"தாயே! நான் ஏன் கேட்கிறேன்? கிடைத்ததில் மூன்றில் ஒரு பங்கை நீங்களே அவன் சந்நிதிக்கு வந்து சேர்த்துவிடுங்கள்" என்றான் உருக்கத்துடன்.

பின்வரும் நிபந்தனைகளின்பேரில், அன்று இரவு அந்த வீட்டில் பூஜை செய்து துளசிபாயே புதையலை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கொண்டான். இந்த விஷயம் எவருக்கும் தெரியாதபடி பரம ரகசியமா யிருக்க வேண்டும். பூஜைக்குத் தேங்காய், பழம், குடன், சாம்பிராணி, நாலைந்து தக்ஷிணை, — இவற்றுடன் ஒரு அலாரம் கடிகாரம், கிராமபோன் பெட்டி, கடப்பாரையும் வேண்டும். அலாரம், புதையலை வெளியே எடுக்க வேண்டிய சுப லக்னத்தைக் குறிக்க; அக்கம் பக்கத்தினர் ஒருவேளை கடப்பாரையால் தரையைத் தோண்டும் சத்தத்தைக் கேட்டுக் கொள்ளாதபடி இசைத் தட்டுகளை வைத்துச் சங்கீதப் பேரொலியைப் பரப்ப கிராமபோன் பெட்டி!



இந்த பிரார்த்தனைகளுக்குத் தனபி சந்தோஷத்துடன் இசைந்தாள். கணவர் வந்ததும் அவரிடம் எல்லாவற்றையும் விவரமாக எடுத்துச் சொல்லி, அவரையும் தன் வழிக்குக் கொண்டு வந்தாள்.

★

அன்று மாலை. தனபாயின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை. பக்கத்து வீட்டுக்காரியிடம் போய், "சித்தி! இப்போது நடக்கிற சினிமா ரொம்ப நன்றாயிருக்கிறது. நேற்றுப் போயிருந்தோம். நீ கூட இல்லையே என்று கவலையாயிருந்தது. நீயும் குழந்தைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு போய்ப் பார்த்து விட்டு வா. இன்றைக்குக் கட்டாயம் பார்த்து விடு. நாளை வேறு படம் மாற்றுகிறார்களாம். எங்கள் வீட்டு 'பிரீ பாஸ்' சும்மாதான் கிடக்கிறது. கொண்டு போ! ஏன் வீணாய்ச் செலவழிக்கிறாய்?" என்று மிக்க உற்சாகத்துடன் கேட்டுக் கொள்ளவே, அந்த அம்மணி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தன் குழந்தை குட்டி பரிவாரங்களுடன் பாஸை வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

இரவு எட்டு மணிக்குப் பூசாரி பூஜையை ஆரம்பித்தான். வீட்டுப் பட்டாசாலையிலிருந்து விளக்கின் முன் கும்பம் வைத்து ஜபத்தை ஆரம்பித்தான். வீடெங்கும் சாம்பிராணியின் வாசனை கம்மென்று பரவியது. அவன் ஒரு மூலையில் பலமாகத் தட்டினான். 'கண் கண்' என்று வெண்கல நாதம் கேட்டது. கடப்பாரையினால் தளவரிசைச் செங்கல்லைப் பெயர்த்தான். இரண்டு மூன்று செங்கற்கள் இலேசாகப் பெயர்ந்து விட்டன. அதன் அடியில் மெதுவாகத் தோண்டினான். சிறு சிறு ஓடுகள் வந்தன; பின்னர் சுண்ணாம்புக் கட்டிகள்; பின் முழுசாக இரண்டு அகல ஓடுகள்; அதன்பின் கடினமான கல். தனபாய் மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அனுமந்த ராயர் மண்ணை அள்ளி அள்ளி வெளியே போட்டுக் கொண்டிருந்தார்.

"சுவாமி! இப்போது கருங்கல் வரிசையொன்று. அதைத் தகர்த்தாக வேண்டும். அதன் பிறகு அரை அடி தூரம் களி மண்; அதனடியில் வெண்கலப் பானை நிறையப் பொன்! இப்போது நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வாசற் பக்கம் யாராவது வந்துவிடக் கூடாது. கதவைப் பூட்டிக்கொண்டு நீங்கள் தெருவிலேயே நின்று காவல் காக்க வேண்டும். அம்மணி! நீங்கள் வாசற்பக்கம் போய்க் கிராமபோன் பிளேட்டுகளை வைக்கலாம். கருங்கல்லைத் தகர்க்கப் போகிறேன். ஜாக்கிரதை! அலாரம் அடித்ததும் உடனே இருவரும் வந்துவிட வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டான்.

அவன் சொன்னபடி வாசற்பக்கம் கதவைச் சாத்திக்கொண்டு அனுமந்தராயர் வீதியிலேயே காத்திருந்தார். யாராவது போனால் ராயர் இருமலை வரவழைத்துக் கொண்டு 'ராம ராம' என்று கூறிக்கொண்டிருந்தார். தனபி பெருஞ் சத்தத்துடன் அலறும்படி பொறுக்கி யெடுத்த இசைத் தட்டுகளை வைத்துப் பேரொலியைக் கிளப்பிக் கொண்டிருந்தாள்!

சிறிது நேரத்துக்கெல்லாம் 'கீங்......' என்ற அலாரத்தின் ஒலி கேட்டது. உடனே "வாருங்கள், வாருங்கள்!" என்று அனுமந்த ராயரை வாசற்பக்கம் போய் அழைத்துக் கொண்டு தனபி வீட்டினுள் நுழைந்தாள். சாம்பிராணிப் புகையில் கண்கள் கரித்தன. கண்ணீர் வந்துவிட்டது. சற்று நேரம் கண்களைக் கசக்கிக்கொண்டு மெதுவாக நகர்ந்து விளக்கின் முன்னால் சென்றாள். ராயர் அவளைப் பின் தொடர்ந்தார். பூமியிலிருந்து தோண்டி யெடுத்த செங்கற்களும் மண் கட்டிகளும் கால்களில் தட்டியதால் இடறி விழப் பார்த்தாள். நல்ல வேளை, கீழே தரையில் கையை ஊன்றிக் கொண்டாள். பய பக்தியுடன் தோண்டிய குழியில் குனிந்து கையை விட்டுத் தடவினாள். ஒன்றையும் காணோம். சுரீரென்று தேள் கொட்டி விட்டது போலிருந்தது. "ஐயையோ, கோவிந்தா!" என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டு கையை வெளியே எடுத்தாள். ராயர் விளக்கைத் தூண்டினார்.

என்ன ஆச்சரியம்! அங்கே புதையலைக் காணவில்லை; ஏழுமலையானையும் காணவில்லை. விளக்கை எடுத்துக் கொண்டு தேடினதில் பின்புறத்துக் கதவும் தோட்டத்துக் கதவும் அகலத் திறந்து கிடந்தன. அந்த அறைக்குள் வைத்திருந்த டிரங்குப் பெட்டியையும் காணோம்!

ஐயையோ! அன்று எண்ணெய் ஸ்நானம் செய்ததால் தன் உயிருக்குயிரான சங்கிலியைக் கழற்றி அந்தப் பெட்டியில்தானே வைத்திருந்தாள், தனபாய்! — அட, கோவிந்தா! இதுவா உன் திருவிளையாடல்?

எழுத்தாணி

கு.ரா.

பிரம்மதேவன் சிருஷ்டித்த முதல் பொருள் எழுத்தாணி. சிருஷ்டிக் கடவுள் அதைச் சிரஞ்சீவியாகவே படைத்து விட்டான். பிறகே தன்னுடைய மற்றைய சிருஷ்டிகளைத் தொடங்கினான். அவற்றின் தலையில் தன்னுடைய பிரசித்தி பெற்ற லிபியை எழுத்தாணி கொண்டு எழுத ஆரம்பித்தான்.

பிரம்மாவின் எழுத்தாணிக்கு நேர் எதிரிடையானது சித்ரபுத்ரன் வைத்திருக்கும் எழுத்தாணி. பிரம்மாவின் எழுத்தாணி ஒரு ஜீவனுடைய வாழ்க்கையை ஆரம்பித்து வைத்துப் பிள்ளையார் சுழி போட்டால், சித்ரபுத்ரன் எழுத்தாணி அந்த ஜீவனுடைய வாழ்க்கை ஏட்டின் கடைசிப் பக்கத்தில் கோட்டைக் கிழித்துச் 'சுபம்' போட்டு வைக்கிறது.

பிரம்மாவின் ஹஸ்த லிகித முத்திரை பெற்று இந்தப் பூலோகத்தில் ஜனனமாகும் ஒருவன், டாக்டர் ஒருவரைத் தேடிப் போகிறான். அந்த டாக்டரும் அவனுடைய கையை நீட்டச் சொல்லி, பரீட்சித்து விட்டுப் பிறகு நாக்கை நீட்டச் சொல்கிறார். பிறகு, அந்தச் சாக்ஷாத் பிரம்மாவே பொறாமைப் படும்படியான கையெழுத்தில் 'பிரஸ்கிரிப்ஷன்' ஒன்றைத் தம்முடைய பேனாவினால் எழுதி அவனிடம் கொடுத்துவிட்டுத் தம்முடைய கையை நோயாளியிடம் நீட்டுகிறார். நோயாளியும் ஒரு பச்சை நோட்டை அவரிடம் நீட்டி விட்டு, அவர் சொன்ன மருந்தை வாங்கிக் குடித்து விட்டு, சில நாள் படுக்கையில் நீட்டியும் முடக்கியும் படுத்திருந்து விட்டுக் கடைசியாக இந்த உலகிலிருந்தே விடை பெற்றுக் கொள்கிறான்!

முன் காலத்தில் நம் நாட்டில் எழுத்தாணி ஒன்றே ஒப்பற்ற எழுதுகோலாக விளங்கி வந்தது. இப்பொழுது நாம் எழுத்தாணியில் எழுதுவதையே மறந்து விட்டோம். அதன் காரணமாகத்தானோ என்னமோ 'ஆணித்தரமாக' எழுதுவது என்பது வெறும் பேச்சளவில் மட்டும் இருந்து வருகிறது. பனை ஓலைகளைப் பதமாகப் பொறுக்கித் துவாரம் போட்டு அடுக்கித் தங்களுடைய கவிதைகளைப் பொறித்தார்கள் அந்தக் காலத்துக் கவிஞர்கள். இந்தக் காலத்திலோ கவிதைகளை அப்படியே 'டைப்' அடித்து விடுகிறார்கள். இதனால் பனை ஓலைகள் துளைக்கப் படுவதில்லை, துளைக்கப் படுவது நம் செவிகள் தான்!

எழுத்தாணியை ஆயுதமாகவும் உபயோகிக்கலாம் என்று தெரிகிறது. "புலவரே! உமக்கு ஒரு யானையும், லட்சம் வராகனும் பரிசளிக்கத் தீர்மானித்துள்ளேன். யானையை எப்படி ஓட்டிச் செல்வீர்? வழியில் திருடர்கள் வந்தால் எப்படி உம்மைக் காத்துக் கொள்வீர்?" என்று ஓர் அரசன் ஒரு புலவரைப் பார்த்துக் கேட்டானாம். அதற்கு அந்தப் புலவர், "அரசே, அஞ்சற்க! திருடர்களை என் எழுத்தாணியால் எதிர்க்க வல்லேன். யானைக்கும் அஃதே அங்குசம்!" என்று பதில் சொன்னாராம்.

கம்பர், சோழ அரசனுடைய புதல்வனை எழுத்தாணியால் குத்திக் கொன்றார் என்று ஒரு கர்ண பரம்பரைக் (கர்ண கடூரமான) கதை வழங்குவதைச் சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். இதிலிருந்து ஒன்று தெரிகிறது. அதாவது 'ஆண்டி கம்பர் கோஷ்டி' இன்று நேற்றல்ல, ரொம்ப நாளாகவே தமிழ் நாட்டில் இருந்து வருகிறது என்பதுதான்.

கொலைக் கருவியாக எழுத்தாணி உபயோகப்பட்டதோ இல்லையோ, சத்தியாக்கிரகம் செய்வதற்குச் சீத்தலைச் சாத்தனார் அதை உபயோகப்படுத்தினார் என்பது பிரசித்தம். போலிக் கவிதைகளைக் கேட்ட போதெல்லாம் அவர் தம்முடைய தலையில் தாமே எழுத்தாணியால் ஒரு தரம் குத்திக் கொள்வாராம்!



ஆனால், இவ்வளவு மகிமை வாய்ந்த இந்த எழுத்தாணியை விநாயகர் விரும்பவில்லை என்று தெரிகிறது. அவர் வியாச பாரதத்தைத் தங்கு தடையின்றி எழுதுவதற்கு, எந்த இரும்பு ஆணியும் சரிப்பட்டு வராது என்று தம்முடைய தந்தங்களில் ஒன்றையே ஒடித்து எடுத்துக் கொண்டாராம்!

மேல்நாட்டு நாகரிகத்தை நம்மிடையே அதிகம் பரவ விடாமல், நம்முடைய பொது ஜன சர்க்கார் நம்மைப் பாதுகாத்து வருகிறார்க ளல்லவா? அவர்களுடைய தயவால் இன்னும் கொஞ்ச நாளில் நம் நாட்டில் துணி மில்களே துளிக்கூட இல்லாமல் போகப் போகின்றனவாம். அவர்கள் வள்ளுவர் காலத்துக்கே நம்மை அனுப்பிக் கைத்தறியின் அருமை பெருமைகளை நமக்குக் கண் கூடாகக் காட்டப் போகிறார்களாம். இன்னும் ஒரு படி முன்னேறி எழுத்தாணிகளின் பெருமையை நம் நாட்டு ஜனங்களுக்கு ஏன் மனத்தில் பதியும்படி அவர்கள் செய்யக் கூடாது? ஏன் நாடெங்கும் எழுத்தாணி மகாநாடுகள் கூட்டக் கூடாது? "எழுத்தாணியால் எழுதுவது எப்படி?" என்பதைப் பற்றி அச்சடித்த துண்டுப் பிரசுரங்களை ஏன் வழங்கக் கூடாது? எழுத்தாணியால் எழுதுவதைக் கற்றுக் கொடுக்க விசேஷ வகுப்புகள் ஏன் நடத்தக் கூடாது? கதர் கட்டிக்கொண்டு கதர்ச் சட்டையில் எல்லோரும் பார்க்கும்படி 'பார்க்கர்' பேனாவைச் செருகிக் கொண்டு திரிவதைவிட அந்தக் கதர்ச் சட்டையில் எழுத்தாணியைக் குத்திக் கொண்டிருந்தால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்? சுதந்திர இந்தியாவின் முதல் இரும்புச் சாமானாக எழுத்தாணிகளை லட்சக் கணக்கில் தயார் செய்து, அவற்றை 'மேலை நாட்டுக்குக் கப்பல் விட்டு' அங்கேயும் விற்பனை செய்யலா மல்லவா?

எழுத்தாணியைப் பற்றிக் கம்பர் பாடியதாக ஒரு கவிதையை ரஸிகமணி டி.கே.ஸி. அவர்கள் சொல்லுவார்கள்: தமக்கு நல்ல எழுத்தாணி வடித்துத் தந்த மாமண்டூர் ஸிங்கன் என்னும் கொல்லன்மேல் பாடிய பாட்டு அது. ஸிங்கனது சாமர்த்தியத்தை மெச்சி மும்மூர்த்திகளும்—ஏன், குமாரக் கடவுளும் கூடத் தங்கள் தங்கள் ஆயுதங்களை அவனிடம் சென்று செய்து தரும்படிக் கேட்டார்கள் என்பது கவிதையின் பாவம்.

"ஆழியான் ஆழி, அரன்மழுத் தானென்பான்.
கோழியான் குன்றெறிய வேலென்பான்—
ஊழியான்
அங்கை எழுத் தாணி அருளென்பான்,
மாமண்டூர்ச்
சிங்கன் உலைக்களத்திற் சென்று."

ஸிங்கனுக்கும் எழுத்தாணிக்கும் சேர்த்து கம்பர் அளித்திருக்கும் 'ஸர்டிபிகேட்டை' விட உயர்ந்ததாய் நான் வேறு என்னத்தைச் சொல்ல?



அநுபவசாலி!

எஜமானன்:—ஏன் அப்பா, நீ என்ன இப்படி ஒரேயடியாய்த் தண்ணீரை ஊற்றியிருக்கிறாயே! செடியெல்லாம் அழுகியல்லவா போய்விடும்? உனக்குத் தோட்ட வேலையிலே அநுபவம் இல்லைபோலிருக்கிறது! இதற்கு முன்னாலே நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?

வேலைக்காரன்:—பால் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தேன், எஜமான்!

★

கவலை வேண்டாம்!

மனைவி:—உங்களுக்காக இட்டிலி செய்து மூடி வைத்திருந்தேன். பாழாய்ப் போன பூனை வந்து எல்லாவற்றையும் தின்றுவிட்டது!

புருஷன்:—போனால் போகிறது. கவலைப் படாதே! பூனை ஒன்றும் செத்துப் போய் விடாது!

★

ஊகம் சரிதான்!

"நீ செத்துப் போய் விட்டாய் என்று நினைத்து விட்டேன்."

"திடீரென்று ஏன் அப்படி நினைத்தாய்? யாராவது ஏதாவது சொன்னார்களா?"

"ஆமாம். உன்னைப் பற்றி ஒருவர் இன்றைக்கு ரொம்பப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார். அதனாலேதான் அப்படி நினைத்தேன்!"

★

அற்புதப் பிறவி!

"ஒட்டக்கூத்தர் இன்று உயிருடன் இருந்தால் அவரை ஒரு அற்புத மனிதர் என்று கருத மாட்டார்களா?"

"நன்றாகக் கருதுவார்கள். எண்ணூறு வயதான மனிதர் உலகத்துக்கே ஒரு அற்புத மனிதர்தானே!"

★

விஞ்ஞானி அல்ல!

நண்பர்:—உங்கள் அறையைப் பார்த்தால் விஞ்ஞானியின் அறையைப் போல இருக்கிறதே. நீங்கள் எப்போது விஞ்ஞானம் படித்தீர்கள்?

வீட்டுக்காரர்:—இந்தப் 'பாட்டில்'களைப் பார்த்து விட்டுச் சொல்கிறீர்களா? நான் ஒன்றும் விஞ்ஞானம் படிக்கவில்லை. இவையெல்லாம் என் மனைவியின் முகப் பவுடர், கூந்தல் தைலம், வாசனை திரவியங்கள் முதலியவற்றின் 'பாட்டில்'கள்தான்!

வாழ்க்கையின் முடிவு

லல்லு

ஐப்பசி மாதம்; மழை பெய்து ஓய்ந்ததும் வெய்யில் பொன்னைப் போல அடித்தது. பூமிதேவி அப்பொழுது தான் நீராடி வந்த இள மங்கையைப் போல் பரிசுத்தமான தோற்றம் பூண்டிருந்தாள்.

மகிழ மரத்தடியில் புத்தம் புது மலர்கள் உதிர்ந்து கிடந்தன. அவற்றைப் பொறுக்கி மடியில் கட்டிக்கொண்டு, வராந்தா தூணில் சாய்ந்து உட்கார்ந்த வண்ணம் மாலைகளாகக் கோத்தேன்.

கணவன் வரவுக்காகக் காத்திருந்த நான் என்னையறியாமலே சிந்தனை யுலகுக்கு இழுத்துச் செல்லப்பட்டேன். எங்கள் 'மாதர் சங்க'த்தில் நான் ஆரம்பித்து வைத்த திட்டங்களில் ஒன்றாவது உருப்படியாக நடைபெறவில்லை. படித்த பெண்கள் நிறைய இருந்தும் அவர்கள் உற்சாகமெல்லாம் 'டேபிள் டென்னிஸ்'ஸோடும், புது 'மோஸ்தர்' புடவை, நகைகளோடும் நின்று விட்டது!

நான் படித்துப் பட்டம் பெற்றது எதற்காக? எல்லாப் பெண்களையும் போல நானும் ஒருவனுக்கு மனைவியானேன்—வரும் தலைமுறைக்குச் 'சந்தா'வாக சில மக்களைப் பெற்று மகிழ்வதற்கு! உலகத்திலே பெண் ஜன்மமெடுத்தால் அவள் கடமை இதோடு தீர்ந்து விடுவதாகத் தானே எல்லோரும் அபிப்பிராயப் படுகிறார்கள்? இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது என்பீர்கள்; வாஸ்தவந்தான். ஆனால் கல்லூரியில் மாணவியாக இருந்த அந்த நாளில் என்னென்ன கனவுகள் கண்டோம்? தேச விடுதலைக்காகவும் மக்கள் முன்னேற்றத்துக்காகவும் என்ன என்ன மாபெருந் திட்டங்கள் வகுத்தோம் என்பதை இன்று நினைத்துப் பார்க்கும்போது ஒரு ஹாஸ்யங் கலந்த சிரிப்பே பீறிக் கொண்டு கிளம்புகிறது!

*   *   *

எங்களில் தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் யாரும் இல்லை! சிலர் W. A. C.யில் சேர்ந்து யுத்த சேவை செய்ய முன்வந்தனர். என் அருமைத் தோழி வயலட் குணசாகரம் நர்ஸிங் படையில் சேர்ந்து பர்மா போர் முனைக்குச் சென்றாள். அவள் கதையை நினைத்துப் பார்க்கும்போது என் மனம் மிகுந்த வேதனையடைகிறது.

ஆறு வருஷங்களுக்கு முன் இதே மாதத்தில் பூத்த மகிழ மலர்களை மாலையாகக் கோத்துக் கல்லூரிக்கு ஒரு நாள் எடுத்துச் சென்றிருந்தேன். வகுப்புக்குள் நுழையும்போது கதவருகில் நின்றிருந்த அந்தப் பெண், "எனக்கும் ஒருநாள் மாலை கொண்டு வந்து தருகிறாயா?" என்று கேட்டாள். அவள் என் வகுப்பு மாணவியாயிருந்த போதிலும் அவ்வளவாகப் பரிச்சயமில்லை; பெயர் மட்டுந்தான் தெரியும். எங்களுடைய முக்கிய பாடங்கள் வெவ்வேறாயிருந்தமைதான் இதற்குக் காரணம்.

நான் சொன்னேன், "அதற்கென்ன, இந்த மாலையை இன்று நீதான் எடுத்துக் கொள்ளேன்!" என்று. அவள் 'வந்தனம்' என்று சொல்லி அதை வாங்கிக் கொண்டாள்.

அது முதல் நாங்கள் சந்திக்கும்போதெல்லாம் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டே போவோம். நெருங்கிப் பழக மட்டும் ஒருவரும் துணிவுடன் முன் வரவில்லை.

என் தகப்பனாருக்குத் திடீரென்று அனந்தபூருக்கு மாற்றலாயிற்று. நான் மாணவிகள் விடுதியில் தங்க ஏற்பாடாயிற்று. தனி அறை கிடைக்காததால், வயலட் தன் அறையை என்னுடன் பகிர்ந்து கொள்ள முன் வந்தாள். நான் ஆட்சேபிக்கவில்லை. எங்கள் நட்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஆசிரியைகளும் 'இணை பிரியாத் தோழிகள்' என்று கையாண்டி செய்யும் நிலைக்கு வந்து விட்டது!

வயலட்டின் ரூப சௌந்தரியத்தைப் பற்றிப் புகழ்வதற்கு ஒன்றுமில்லை. பார்த்தால் யாரும் கண்ணை மூடிக்கொள்ள மாட்டார்கள்; அவ்வளவுதான்!

அந்தி மயங்கும் வேளையில் எங்கள் அறையை ஒட்டியிருந்த 'பால்கனி'யில் பாயை விரித்துக் கடலைப் பார்த்தபடி உட்கார்ந்து கொள்வோம். வெகு நேரம் பேச்சுப் பேச்சென்று பேசுவோம். ஷெல்லி, டாகூர் கவிதைகளிலே அவளுக்கு அபார

மோகம்; பாரதியார் பாட்டுக்களிலே எனக்குப் பித்து. இனிய சாரீரமும் எனக்கு அமைந்திருந்தது. பாட்டுக்களை மீண்டும் மீண்டும் பாடச் சொல்லிக் கேட்பாள் அவள். நம் அடிமை நாடு சுதந்திரம் பெறுவதற்காகப் பிற்காலத்தில் அவள் போர் புரிந்தாளே, அந்தச் சுதந்திர வேட்கைக்கு வித்து நட்டது நான்தானோ?

அன்று என் தகப்பனாரிடமிருந்து எனக்கு வரன் ஒன்று வந்திருப்பதாகக் கடிதம் வந்தது. இந்தச் சம்பந்தம் எல்லாவிதத்திலும் சிலாக்கியமாகப் படுவதால் சீக்கிரத்தில் விவாகத்தை நடத்திவிட விரும்புவதாகவும், என்னுடைய 'அப்ரூவ்'லுக்கு மணமகனின் படம் வைத்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

எங்கள் இருவருக்குள் ஒளிவு மறைவு ஒன்றுமில்லாததால், நான் உடனே வயலட்டிடம் கடிதத்தையும் படத்தையும் காண்பித்தேன். "மணமகன் ரொம்ப நன்றாயிருக்கிறான்!" என்று சொல்லி, என்னை எவ்வளவோ பரிகாசம் பண்ணினாள். ஆனாலும் அவள் உற்சாகத்திலே சற்று வருத்தமும் கலந்திருந்தாற்போல எனக்குப் பட்டது. என் சொந்த உணர்ச்சிகளிலேயே லயித்துப் போயிருந்த நான் அதை அவ்வளவாக அப்போது பொருட்படுத்தவில்லை.

2

அடுத்த வாரம் கல்லூரி வருஷாந்திரக் கொண்டாட்டம் வந்தது. இந்தக் காரியங்களெல்லாம் வயலட்டின் முக்கிய உழைப்பைக் கொண்டுதான் நடைபெறும்; காரிய நிர்வாகத்திலே அவ்வளவு கெட்டிக்காரி. அன்று பூக்காரனுக்குப் பணம் கொடுப்பதற்காகப் பெட்டியில் 'பர்ஸ்' வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பிட்டு அதை எடுத்து வரச் சொல்லி என்னை அனுப்பினாள்.

நான் அவள் குறிப்பிட்ட சிறு பெட்டியை விட்டுவிட்டு வேறு ஒன்றைத் தவறுதலாகத் திறந்துவிட்டேன். 'கம்' மென்று வாசனை கிளம்பிற்று. 'என்ன?' என்று பார்த்தேன். மகிழ மலர் மாலை யொன்று அந்தப் பெட்டியில் கிடந்தது. நான் அதை இழுத்தேன். அதில் சிக்கிய உறை ஒன்று கீழே விழுந்தது. உறைக்குள்ளிருந்து ஒரு கடிதமும், புகைப் படமும் வெளியே நழுவி விழுந்தன. அவற்றைத் திருப்பி உறைக்குள் போடும்போது பெண்களுக்குச் சுபாவமான ஆசையினால் தூண்டப்பட்டு படத்தை மட்டும் பார்த்தேன். ஆகாய விமானப் படையைச் சேர்ந்த ராணுவ உடுப்பணிந்த ஒரு வாலிபன் புன்முறுவலுடன் காட்சியளித்தான்.

எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. வயலட்டைப் பார்க்க அவளுடைய அத்தான் பரஞ்சோதி என்பவர் கல்லூரிக்கு அடிக்கடி வருவார். நானும் ஒவ்வொரு சமயம் அவருடன் பேசியதுண்டு. அவர் அவளைக் காதலிக்கிறார் என்பதை நான் எளிதில் கண்டு கொண்டேன். அத்தான் என்ற முறையில் அவரை அவள் மணப்பாள் என்றும் எதிர் பார்த்தேன். இப்படியிருக்க வேறொரு யுவனின் படத்தை அவள் மிகவும் பத்திரமாக வைத்துப் போற்றுகிறாள் என்றால், அவனையே அவள் காதலிக்கிறாள் என்றல்லவோ ஆகிறது?

பெட்டியைப் பழையபடி சீர்படுத்தி வைத்துவிட்டுப் பணத்தை அவள் குறிப்பிட்ட சிறு பெட்டியிலிருந்து எடுத்துக் கொண்டு போனேன்.

அன்று கொண்டாட்டங்கள் எதிலும் என் மனம் அவ்வளவாக ஈடுபடவில்லை. எல்லாம் முடிந்து நாங்கள் படுக்கச் சென்ற போது நடுநிசி யாகிவிட்டது. தூக்கம் பறந்து போயிற்று. வயலட் விழித்துக் கொண்டுதான் இருக்கிறாள் என்று அறிந்து, அவள் படுக்கை யறைக்குப் போய் அவளருகில் உட்கார்ந்து கொண்டேன்.


"வயலட், நாம் சீக்கிரத்திலேயே பிரிந்து விடப் போகிறோம் அல்லவா? நீ எந்த அதிர்ஷ்டவானுக்கு மாலையிடப் போகிறாய் என்று இன்னும் எனக்குச் சொல்லவே யில்லையே?" என்றேன்.

அவள் சிரித்துவிட்டு, "போடி, வேலையற்றவளே! என்னை நீ அறிந்து



சாக்ஷாத் நானேதான் !

கொண்டது அவ்வளவு தான். நான் என்றும் கன்னிகையாகவேதான் இருக்கப் போகிறேன். எனக்கோ பணத்துக்குக் கஷ்டமில்லை. எனவே வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடிக் கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கில்லை. என் விருப்பம் போல எதாவதொரு சேவையில் ஈடுபடலாமல்லவா? ஆனாலும் உன்னை அடிக்கடி வந்து பார்ப்பேன்; வருத்தப்படாதே!'' என்றாள்.



ஜேம்ஸ் ஞானப்பிரகாசம்

''என்றும் கன்னிகையாகவே இருப்பேன் என்று எளிதாகச் சொல்லிவிடலாம்; அது வாழ்க்கையிலே நடைபெறக் கூடிய காரியமல்லவே?''

''என் தீர்மானம் எதற்கும் இனி அசைந்து கொடுக்காது. தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு இதென்ன வம்பு? போய்ப் படுத்துக் கொள்!'' என்றாள்.

பச்சையாகக் கேட்டாலொழிய அவளாக ஒன்றும் சொல்ல மாட்டாள் என்று தெரிந்து, ''நீ இப்படி முடிவு கட்டி விட்டால் அத்தான் பரஞ்சோதி உன்னைச் சும்மா விட்டு விடுவாராக்கும்?'' என்றேன்.

''சே, சே! அவரும் நானும் அத்தான்—அம்மங்கார் முறையில் தாராளமாகப் பழகுவதை நீ தவறுதலாகக் கற்பனை செய்து கொண்டு விட்டாயே? அவரை நான் காதலிக்கவில்லை; அவரும் என்னை மணம் செய்து கொள்ள உத்தேசிக்கவில்லை!'' என்றாள்.

பேச்சை இவ்வளவு வளர்த்திய பிறகு உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் விடுவானேன் என்று, ''உன் பெட்டியைத் தவறுதலாகத் திறந்து விட்டேன். அதனுள் விருந்த படம் ஒன்று என் கண்ணில் பட்டு விட்டது. அது யார் என்பதை நான் அறியலாமா?'' என்று கடைசியில் கேட்டே விட்டேன் தைரியமாக.

அவள் ஒரு நிமிஷம் மௌனமாயிருந்தாள். நல்ல வேளையாக நான் எதிர்பார்த்துப் பயந்தபடி அவளுக்குக் கோபம் வரவில்லை. அதற்குப் பதிலாக ஆழ்ந்த பெருமூச் சொன்று அவள் மார்பைப் பிளந்து கொண்டு வந்தது. ''அதையெல்லாம் உனக்குச் சொன்னால் நீயும் வருந்தப்படுவாய். இருந்தாலும் உன் விருப்பப்படி சொல்லிவிடுகிறேன். என்னைத் தேற்றவோ, அல்லது ஏதாவது உபதேசம் சொல்லவோ மட்டும் செய்யாதே!'' என்று எச்சரித்துவிட்டு, ''அவர் பெயர் ஜேம்ஸ் ஞானப்பிரகாசம். என் தந்தையின் நெருங்கிய நண்பரின் மகன் அவர். சிறு வயதிலிருந்தே நாங்கள் பழகி வந்தோம். பால்யத்தில் நாங்கள் ஒருவர் மீதொருவர் கொண்ட இனந் தெரியாத அன்பு எங்களுக்கு வயது வந்ததும் இயற்கையாகவே காதலாக மாறிற்று. எங்கள் விவாகத்தைப் பெற்றோரும் விரும்பி வரவேற்றனர். எனக்கு அவர் மோதிரம் அணிவித்து நிச்சயதார்த்தம்கூடச் செய்து கொண்டார். யுத்தம் வந்தது; அவர் விமானப் படையிலே லெப்டினண்ட் பதவி பெற்றுப் போர்முனைக்குச் சென்றார். எதிரிப் பிரதேசத்தில் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு அது எரிந்து போய் விட்டதால் அவர் கொல்லப்பட்டதாக எங்களுக்குச் செய்தி வந்தது. இனி எனக்கு வாழ்க்கையிலே என்ன சுவை இருக்கிறது? ஏதாவது ஒரு சேவையில் ஈடுபட்டு என் துக்கத்தை மறக்க முயல வேண்டியதுதான். என் வெப்பமான வாழ்க்கையிலே இளந் தென்றலைப்போல் சிறிது காலம் உன்னுடைய நட்புக் கிடைத்தது. அதற்கும் இப்போது முடிவு காலம் வந்துவிட்டது!'' என்றாள்.

பிறகு எங்களுக்கிடையே நிலவிய மௌனம் பயங்கரமாக இருந்தது. என்னை அணைத்துக் கொண்டு அவள் ஒரு மூச்சு அழுதிருந்தாளானால் என் மனதுக்கு எவ்வளவோ சமாதானமாயிருந்திருக்கும். அவளைத் தேற்றவும் எனக்குத் தைரியம் வரவில்லை. சிறிது நேரம் பொறுத்து அவள் உத்தரவிட்டபடி படுக்கைக்குச் சென்றேன்.

அன்று எங்களுக்குச் சிவராத்திரி!

3

படிப்பு முடிந்ததும் என் விவாகம் நடந்தது. லயலட் 'சர்வீஸ்' பயிற்சி பெற்று யுத்த முனைக்குச் செல்லத் தயாரானாள்.

பர்மாவுக்குச் செல்லு முன் அவன் என்னை வந்து கண்டான். அதுவே எங்கள் கடைசி சந்திப்பு. ஞானப்பிரகாசம் அவளுக்கு எழுதிய கடிதங்களும், அவர் படமும், வாடிப்போன மகிழ மலர் மாலையும் அடங்கிய பெட்டியை என்னிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்கும்படி சொன்னான். தந்தைக்கு வயதாகி விட்டதால், தான் இல்லாத சமயத்தில் அவருக்கு ஏதாவது நேர்ந்து, கடிதங்கள் வேறு யார் கையிலாவது அகப்பட்டு விடப்போகிறதே என்று தான் அவ்வாறு செய்தான்.

1942-ம் வருஷ முற்பகுதியில் பர்மாவுக்குள் ஜப்பானியரின் திடும் பிரவேசமும், பிரிட்டிஷார் படு தோல்வி யடைந்து இன்னொரு 'டன்கர்க்' நடத்தியதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நேதாஜியைப் பற்றியும், அவர் தேசிய ராணுவத்தின் தீரச் செயல்களைப் பற்றியும் சொல்லத் தேவையில்லை.

பிரிட்டிஷார் வெளியேறின போது வயலட் பர்மாவிலேயே தங்கி விட்டாள். பிறகு ஜான்ஸி ராணிப் படையில் சேர்ந்து, 1944-ம் வருஷ ஆரம்பத்தில் மேமியோ ராணுவ ஆஸ்பத்திரியில் போர் முனையில் காயமடைந்த இந்திய வீரர்களுக்குச் சிகிச்சை புரிந்ததாகவும், பின்னர் ஆணுக்குச் சமமாகப் போர் புரிந்ததாகவும் தெரிய வந்தது.

1945-ல் தராசு பிரிட்டிஷார் பக்கம் சாய்ந்தது. மே மாதம் ரங்கூன் பிடிபட்டது. வயலட் குணசாகரமும் மற்ற இ. தே. ரா. வீர ரமணிகளுடன் பாதுகாப்பில் வைக்கப் பட்டான்.

ஒரு வழியாக விடுதலையடைந்து திரும்பி விடுவாள் என்று எதிர்பார்த்திருந்த போது, தற்செயலாக ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக அவள் குண்டடி பட்டு இறந்தாள் என்ற செய்தி வந்ததும் கதிகலங்கிப் போனேன். அவள் தந்தையைக் கண்டு ஏதாவது ஆறுதல் சொல்ல வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. ஆகவே, சேலத்துக்கு ஓடினேன். கிழவர் சிறு குழந்தை போல என்னை அணைத்துக் கொண்டு விம்மி விம்மி யழுதார்.


மிஸ் வயலட் குணசாகரம்

வயது சென்ற காலத்தில் தம் செல்வ மகளை இழந்து அவரைப் பரிதவிக்கச் செய்த யமன் கொடியவன் தான்!

அன்று சாயந்திரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது யாரோ ஒருவன் அவரைக் காண வந்தான். அவன் கன்னங்கள் ஒட்டி உலர்ந்து போயிருந்தன. முன் தலைமயிர் அகாலத்திலேயே நரைக்க வாரம்பித்திருந்தது. முகம் எரிப் புண் தழும்புகளுடன் பார்ப்பதற்குக் கோரமாயிருந்தது.

குணசாகரம், "அம்மா, இவர்தான் ஞானப்பிரகாசம்; வயலட் இவர்களைப் பத்தி உனக்குச் சொல்லி யிருக்குமே?— ஞானம்! இந்த அம்மாள் வயலட்டுக்கு ரொம்ப ஆப்த சினேகிதி!" என்று என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

அந்த மனிதர்தான் வயலட்டின் உள்ளத்தைக் கவர்ந்த ஞானப்பிரகாசம் என்று அறிந்ததும், நான் உட்கார்ந்திருந்த அறையே என்னைச் சுற்றி வட்டமிடுவது போல இருந்தது.

"என்ன! நீங்கள் எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டு இறந்து போகவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஐயோ! அப்படி இறந்திருந்தாலும் வயலட் என் மனதை விட்டு அடியோடு மறைந்து போயிருப்பாளே!" என்றார் அவர் ஆழ்ந்த பெருமூச்சுடன்.

வாழ்க்கையின் முடிவு யார் கையிலிருக்கிறது? கருத்தொத்த இளங் காதலர்களைப் பிரித்து, காதலனை நடை பிணமாகச் செய்து, காதலியை மண்ணுக்கு இரையாக்கி விட்டது தெய்வாதீனமா?

* * *

இவ்வாறு எண்ணிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான், என் கணவரின் காலடிச் சத்தம் கேட்டு எழுந்தேன். அதற்குள் மகிழம்பூ மாலையும் கோத்து முடிந்து விடவே, அதைத் தலையில் சூட்டிக் கொள்வதற்காக நிலைக் கண்ணாடியின் முன்னால் சென்றேன்.

பால் கஷ்டம் ஏன்?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

இப்பொழுது சென்னையில் ஜனங்கள் பாலுக்குப் படும் பாடு பெரும்பாடா யிருக்கின்றது. இது நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றதே யொழியக் குறையவில்லை.

1944-ம் வருஷத்தில் சென்னையில் கிடைத்த பாலைப்பற்றி ஒரு கணிக்கை எடுக்கப்பட்டது. அந்தக் கணிக்கையின் விவரம் கொஞ்சம் தெரிந்தால் இவ்விஷயம் நன்றாக விளங்கும்.

ஒவ்வொரு நாளும் இந் நகரத்தில் கிடைக்கக்கூடிய பால் சுமார் 24,000 படிகள் ஆகும். இந்த 24,000 படிகளில், 8000 படிகள் வெளியூரிலிருந்து வருகின்றன. பாக்கி யிருக்கும் சுமார் 16,000 படிகள் பட்டணத்தி லிருக்கும் மாடுகளிலிருந்தே கிடைக்கின்றன. இப்படி கிடைக்கும் 24,000 படிகளில் ஜெனரல் ஆஸ்பத்திரி முதலிய சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் சுமார் 1400 படிகள் செலவாகின்றன. உணவு விடுதிகள், ஹோட்டல்கள் இவைகளில் 16,400 படிகள் உபயோகப்படுகின்றன. போக பாக்கியிருப்பது எவ்வளவு? சுமார் 6000 படிகள். இந்த 6000 படிகளைத் தான் பட்டணத்திலிருக்கும் பத்து லட்சம் ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்! இது சாத்தியமா என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

நிற்க. இந்த ஹோட்டல்களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் வேண்டிய பால் எங்கிருந்து வருகின்றது என்பதைச் சற்றுப் பார்ப்போம். உதாரணமாக, ஜெனரல் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொள்ளுவோம். அதற்குத் தினந்தோறும் சுமார் 300 படி பால் வேண்டி யிருக்கிறது. இதற்காக, பக்கத்திலுள்ள தங்கசாலைத் தெரு, ஜார்ஜ் டவுன், பார்க் டவுன் முதலிய இடங்களிலிருக்கும் பால்காரர்கள் தங்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து ஆஸ்பத்திரியில் கட்டிக் கறந்து வேண்டிய பாலைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். இதே மாதிரிதான் மற்றுமுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், ஹோட்டல்களுக்கும். ஆனால் இவ்விடங்களுக்கு மாடுகளை அதிகமாய் ஓட்டிக் கொண்டு வருவதில்லை. வீட்டிலேயே கறந்து வந்து கொடுக்கிறார்கள். இவ்விதம் செய்வதனால் என்ன ஆகிறது? பொது ஜனங்களுக்குப் பால் கஷ்டம் ஏற்படுகிறது.

சர்க்கார் மனது வைத்தால் இதைச் சீக்கிரத்தில் சீர்திருத்தம் செய்யலாம்.

முதன் முதலாக, இந்த ஹோட்டல்கள் தங்களுக்கு வேண்டிய பாலைப் பட்டணத்திலிருந்து வாங்கக் கூடாது. அவைகள் கறந்த பசும் பாலையும் எருமைப் பாலையும் பானத்திற்கும் பட்சணத்திற்கும் உபயோகப்படுத்தக் கூடாது என்று ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பாலுக்குப் பதிலாக, பால் பவுடரைக் கொண்டு செய்த பாலைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று அந்த ஹோட்டல்காரர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்வதில் ஒரு கெடுதலும் இல்லை. இப்பொழுது சென்னை சர்க்கார் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்துப் பால் பவுடரிலிருந்து பால் பண்ணும் யந்திர ஸ்தாபனம் பண்ணியிருக்கிறார்கள். அந்தப் பாலைப் பற்றியும் அதன் குணநயங்களைப் பற்றியும் புகழ்ந்து கொண்டே யிருக்கிறார்கள். ஆகையால் அந்த உயர்ந்த பாலை ஹோட்டல்காரர்கள் உபயோகப் படுத்துவதில் ஒரு கெடுதலும் இல்லை.

இத்துடன் பட்டணத்திலிருக்கும் மாடுகள் கொடுக்கும் பாலை விருத்தி பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும். பால் மாடுகளுக்கு நல்ல தீவனம் முக்கியம். இது சொல்லாமலே தெரிய வேண்டிய விஷயம். இருந்தாலும் சொல்ல வேண்டி யிருக்கிறது. திருப்பித் திருப்பிச் சொல்லவும் வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் பட்டணத்திலிருக்கும் மாடுகள் தீவனக் குறைவால் கஷ்டப்பட்டுத் தேகம் மெலிந்து கிடக்கின்றன. அதனால் அவைகளின் கறவை வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. சீக்கிரம் மறந்தும் போகிறது. ஆகையால் அவைகளுக்குப் போதுமான தீவனம் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்ய வேண்டும். ஜனங்களுக்கு அரிசி, விறகு, சர்க்கரை முதலிய சாமான்களைப் பங்கிட்டுக் கொடுப்பது போல, மாடுகளுக்கு வேண்டிய பிண்ணாக்கு, தவிடு, பொட்டு முதலியவைகளைச் சர்க்கார் வாங்கிச் சேகரித்துப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் பால் அதிகமாகக் கிடைக்கும்; பாலின் விலையும் குறையும். ஜனங்களும் தாராளமாக வாங்கிச் சாப்பிட்டு வியாதி வெக்கை யொன்று மில்லாமல் சௌக்கியமா யிருப்பார்கள். அப்படி யிருப்பதற்குச் சர்க்கார் உதவி புரிய வேண்டியது அவசியமில்லையா?

மேலே சொன்ன இரண்டு ஏற்பாடுகளோடு கூட, மற்றும் ஒன்று அவசியம் செய்ய வேண்டும். பட்டணத்தின் அருகிலுள்ள கிராமங்களில் சிரத்தையோடு பிரசாரம் பண்ணி ஒவ்வொரு கிராமங்களிலும் நல்ல பால் மாடுகள் வைத்து வளர்ப்பதற்கு வேண்டிய வசதிகளும், அவைகளுக்கு வேண்டிய தீவனத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் கிராமத்தார் சந்தோஷத்தோடு பசு மாடுகளை வைத்து வளர்ப்பார்கள். அவ்வூர்களில் கிடைக்கும் பாலைக் கறந்தவுடன் சேகரித்துக் காலதாமதமில்லாமல் பட்டணத்திற்குக் கொண்டு வந்து, ஆஸ்பத்திரிகளுக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் கொடுக்கலாம். தற்காலம் வேகமாகப் போகக்கூடிய மோட்டார் வண்டிகள் கிடைப்பதினால் இதில் கஷ்டம் ஒன்றுமில்லை. சுமார் 40, அல்லது 50 மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து பாலை வெகு சுலபமாகவும் கெடாமலும் காலையும் மாலையும் கொண்டு வரலாம். இவ்வாறு செய்தால் கிராமங்கள் செழிக்கும்; ஆவினம் ஓங்கும்; குடிகள் பலனடைவார்கள்; பட்டணங்களும் பால் கஷ்டமில்லாமல் சௌக்கியமா யிருக்கும்.

ராவ்பகதூர் ஆர். சுவாமிநாதய்யர்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி





KALKI ஏப்ரல் 6, 1947 4 அணா

REGD. NO. M. 4392

